இணை ஆணையர் அலுவலகம்,
இந்துசமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.

ரூ.மூ. நகல் மனு எண். 6231/2025/இ2/நாள் : 03.06.2025

பொருள்: நகல் மனு – O.A.எண்.07/2024 – ன் வழக்கு – மனுதாரர் மனு – கேட்டுள்ளபடி நகல்கள் அனுப்பப்படுகிறது.

பார்வை : திரு.துரை தியாகராஜன், வழக்கறிஞர், தஞ்சாவூர், நாள்.29.05.2025.

====

பார்வையில் காணும் மனுவில் கேட்டுள்ளபடி மேற்படி O.A. 07/2024 வழக்கில் உள்ள தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: தாட்கள்

ஒம்./மு.ஜோதிலட்சுமி,
இணை ஆணையர்

/உத்திரவின் படி/

மேலாளர்
03/06/25

பெறுநர்:

1. திரு. துரை தியாகராஜன்,
வழக்கறிஞர்,
4, பூக்கார 3–ம் தெரு,
தஞ்சாவூர்–613 001.
2. மிகை.

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

**தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் முன்பாக**
**2025 – ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள்**
**(விசுவாவசு வருடம் வைகாசி மாதம் 12 ஆம் நாள்**
**முன்னிலை, திரு. மு. ஜோதிலட்சுமி. எம்.ஏ.பி.எல்.,**
**இணை ஆணையர்**
**ஓ. ஏ. எண். 07/2024**

***

1. கோ. வீரசுந்தரி
2. ரா. நடன சபாபதி
3. இ. சிவகுரு செட்டியார்
4. ரா. ராஜேந்திரன்
5. அ. திருத்தணிவேல் ... மனுதாரர்கள்

/ எதிர் /

1. செயல் அலுவலர்
   அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்,
   வெண்டாகோட்டை, பட்டுக்கோட்டை வட்டம்
   தஞ்சாவூர்.
2. ந. சக்திவேல்
3. ரா. ரெகுமூர்த்தி
4. செ. சதாசிவம்
5. மெ. சுவாமிநாதன்
6. கோ. பழனிவேலு ... எதிர் மனுதாரர்கள்

===

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959 (தமிழ்நாடு சட்டம் 22/59–ன் படி) ஏற்படுத்தப்பட்ட

No of word : 115
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

விதிகளில் சட்டப்பிரிவு 63(b)–ன் கீழ் மனுதாரர்களை பரம்பரை அறங்காவலர்கள் என விளம்புகை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு விதிகளின் படி அறிவிப்பு அனுப்பப்பட்டது. 16.04.2025 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. துரை.தியாகராஜன் அவர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.A.சித்திரைச்செல்வன், திரு.K.சுந்தரமூர்த்தி, திரு. V.கிருஷ்ணசாமி ஆகியோர் ஆஜரானார்கள். இம்மனுவின் விவரங்கள் மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள், மனுதாரர்கள் எழுத்துப்பூர்வமான வாதுரை, எதிர்மனுதாரர்கள் எழுத்துப்பூர்வமான வாதுரை, எதிர் மனுதாரர் ஆவணங்கள், செயல் அலுவலர் அறிக்கை, பட்டுக்கோட்டை, இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் அறிக்கை, இதர தொடர்புடைய ஆவணங்களை பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**உத்தரவு**

**ஓ.ஏ.எண். 07/2024 /இ2/நாள்.26.05.2025**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்களாக விளம்புகை வேண்டி மனுதாரர்களால் இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959–ல் சட்டப்பிரிவு 63(பி)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. இத்திருக்கோயில் நிர்வாகம் பரம்பரை தன்மை உடையது

No of word : 116
No of correction : Nil

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re. COPY STAMP ایک روپیہ

எனவும், மனுதாரர்கள் 1.கோ. வீரசுந்தரி, க/பெ. கோவிந்தசாமி வேளாளர், 2.ரா. நடன சபாபதி, த/பெ. ராஜப்பா வேளாளர், 3. இ. சிவகுரு செட்டியார், த/பெ. இளங்கோவன் செட்டியார், 4.ரா. ராஜேந்திரன், த/பெ. ராமலிங்க தொண்டைமான் மற்றும் 5.அ. திருத்தணிவேல், த/பெ. அரங்கசாமி முதலியார் என்பவர்களை பரம்பரை அறங்காவலர்கள் என்று அறிவித்தும் ஆணையிடப்படுகிறது.

ஒம்./ மு. ஜோதிலட்சுமி,
இணை ஆணையர்

/ உத்திரவின்படி /

மேலாளர்

<u>குறிப்பு:</u>

இவ்வுத்தரவிற்கான இணைப்பிற்கு சான்றிட்ட நகல் பெற ரூ.1/– மதிப்புள்ள நீதிமன்ற ஸ்டாம்பு ஒட்டிய முத்திரை தாட்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

பெறுநர்,

<u>மனுதாரருக்காக</u>

1. திரு. துரை.தியாகராஜன் ,
வழக்கறிஞர்,
26D, பூக்கார புதுவஸ்தா தெரு,
தஞ்சாவூர் – 620 01

} ஒப்புகை பதிவஞ்சல் மூலம்

<u>1ம் எதிர்மனுதாரருக்காக</u>

2. A.Chithiraichelvan, Advocate,
Advocate & Commissioner Of Oaths,
Thanjavur. Enroll No: Ms.1424/1997.
Cell: 97867 90047.

} ஒப்புகை பதிவஞ்சல்

No of word : 97
No of correction : Nil




<u>2ம் எதிர்மனுதார்ருக்காக</u>

3. திரு.K.சுந்தரமூர்த்தி, வழக்கறிஞர்,
பிளாட் எண்.213, 9வது தெரு,
T.P.S. நகர், மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர். } ஒப்புகை பதிவஞ்சல்

<u>3ம் எதிர்மனுதார்ருக்காக</u>

4. V.கிருஷ்ணசாமி வழக்கறிஞர்,
2580, தெற்கு வீதி, தஞ்சாவூர். } ஒப்புகை பதிவஞ்சல்

<u>நகல்:</u>

5. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
6. ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, பட்டுக்கோட்டை.

<u>நகல் பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

7. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.
8. மிகை.

| | |
|---|---|
| No of Words | 52 |
| No.Of Correction | Nil |
| No.of.Total words | 380 |
| No.Of.Total Correction | Nil |
| Typed by | Vandarkuzhali.T |
| Read by | Indhukavi.V |
| Compared by | Jothikani.K |

OFFICE OF THE JOINT COMMISSIONER,
HINDU RELIGIOUS & CHARITABLE ENDOWNMENTS
DEPARTMENT, THANJAVUR.

| | | |
|---|---|---|
| Application Made on | : | 03.06.25 |
| Copy Stamps Called on | : | 03.06.25 |
| Copy Stamps Produced on | : | 03.06.25 |
| Copy Ready on | : | 03.06.25 |
| Copy Furnished on | : | 03.06.25 |

Manager

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

**தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் முன்பாக**
**2025 – ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள்**
**விசுவாவசு வருடம் வைகாசி மாதம் 12 ஆம் நாள்**
**முன்னிலை, திரு. மு. ஜோதிலட்சுமி. எம்.ஏ.பி.எல்.,**
**இணை ஆணையர்**
**ஓ. ஏ. எண். 07/2024**

***

1. கோ. வீரசுந்தரி
2. ரா. நடன சபாபதி
3. இ. சிவகுரு செட்டியார்
4. ரா. ராஜேந்திரன்
5. அ. திருத்தணிவேல் ... மனுதாரர்கள்

/ எதிர் /

1. செயல் அலுவலர்
   அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்,
   வெண்டாகோட்டை, பட்டுக்கோட்டை வட்டம்
   தஞ்சாவூர்.
2. ந. சக்திவேல்
3. ரா. ரெகுமூர்த்தி
4. செ. சதாசிவம்
5. மெ. சுவாமிநாதன்
6. கோ. பழனிவேலு ... எதிர் மனுதாரர்கள்

===

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிர்வாகம் தொடர்பாக.

தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959–ல் சட்டப்பிரிவு 63 (b)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு.

No of word : 117
No of correction : Nil

ONE RUPEE
1ரூபாய் १रुपया
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

**உத்தரவிற்குரிய இணைப்பு (Annexure to the order)**

**ஓ.ஏ.எண். 07/2024/இ2/ நாள்: 26 .05.2025**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தஞ்சாவூர் உதவி ஆணையரின் ஆளுகைக்குட்பட்ட பட்டியலில் சேராத திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலராக அறிவிக்க கேட்டு, தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர்களால் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருககோயில் என்பது தொன்றுத்தொட்டு 200 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் பராமரிப்புக்காக அதே கிராமத்தில் வாழ்ந்து வந்த வேளாளர் வகுப்பினர், செட்டியார் இனத்தினர், தொண்டமான் வகையறாக்கள், முதலியார் வகுப்பினர்களால் நிலங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டு அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தினசரி பூஜைகள், விளக்கு ஏற்றுதல், பூஜகர் ஊதியம் மற்றும் திருக்கோயில் பராமரிப்பு போன்ற பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கோவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தவும், சொத்துக்களை பராமரிக்கவும் அக்காலத்தில் வசித்து வந்த அந்த உள்ளூர் முக்கியஸ்தர்களாகிய மேலே குறிப்பிட்ட சமுகத்தை சேர்ந்தவர்கள் ஒப்பந்தமாக ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் 19.08.1911-ம் தேதியில் எழுதி அதனை பட்டுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 1911-ம் ஆண்டின் ஆவண எண்.5208 ஆக பதிவு செய்துள்ளார்கள். அந்த ஆவணத்தில் இந்த திருக்கோயில் அதன் உப கோயில்களாக அதே ஊரில் இருக்கும் மாரியம்மன் கோயில், அய்யனார் கோயில், முனி கோயில் ஆகியவைகளையும், அதன் சொத்துக்களையும் பாதுகாத்து கோவிலுக்கு செய்ய வேண்டிய காரியங்களையும், திருவிழாக்களையும் நடத்தவும், அதே ஊரைச் சேர்ந்த 1) கோவிந்தசாமி வேளாளர் 2) ராஜப்பா வேளாளர் 3) சொக்கலிங்கம் செட்டியார் 4) கோவிந்த நாயக்கர் 5) ரெங்கசாமி முதலியார் ஆகிய ஐந்து பேர்களும் தலைமை காரர்களாக இருந்து நடத்த வேண்டியதென ஒப்பந்தம் செய்து கொண்டு நடத்திவர

No of word : 169

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய் १रुपया
COPY STAMP

வேண்டியது எனவும், மேலும், மேற்படி 5 பேர்களும் (அ) அவர்களது வாரிசுகளும் அவரவர் பிரியப்படி நடந்து கொள்வதென ஒப்புக்கொண்டுள்ளார்கள். திருக்கோயிலுக்கென வழங்கப்பட்ட நஞ்சை நிலங்களும், மரம், தனை வயைறாக்களும் உள்ளன. இந்த 5 நபர்களும் பாதுகாத்து, பராமரித்து வந்து அவர்களுக்குப் பிறகு அவர்களது வாரிசுகளும் அறங்காவலர்களாக இருந்து நிர்வாகம் செய்து வந்துள்ளார்கள். தற்போது 5 நபர்களில் முதலாவது நபர் கோவிந்தசாமி வேளாளர் இறந்து விட்டார். அவரது வாரிசு வீரசுந்தரி க/பெ. கோவிந்தசாமி வேளாளர் என்பவர் அவருக்காக பொறுப்பில் டிரஸ்டியாக இருந்து வருகிறார். இரண்டாவது நபரான ராஜப்பா வேளாளரும் இறந்து விட்டார். அவரது வாரிசு நடனசபாபதி டிரஸ்டியாக இருந்து வருகிறார். மூன்றாவது நபரான சொக்கலிங்கம் செட்டியாரும் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு அவரது வாரிசாக சிவகுரு இளங்கோ டிரஸ்டியாகவும் நான்கவது நபரான அருணாச்சல தொண்டமானுக்கு பதிலாக ராஜேந்திரன் தொண்டமான் என்பவர் டிரஸ்டியாகவும், ஐந்தாவது நபரான ரெங்கசாமி முதலியார் இறந்த பிறகு அவரது தவாரிசு திருத்தணிவேல் என்பவரும் டிரஸ்டியாகவும் இருந்து நிர்வாகம் பார்த்து வருகிறார்கள். 1959–ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் வந்த பிறகு இத்திருக்கோயில் நிர்வாகத்தை கண்காணிக்க ஒரு செயல் அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஐந்து நபர்கள் சார்பாக அறநிலையத்துறை சட்டப்பிரிவு 63 (b) O.A.05/2007 என்ற செயல் அலுவலரை எதிர்மனுதாரராக காட்டி மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் 08.02.2011–ம் தேதி அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் பிறகு ஆணையர் முன்பாக A.P.14/2012 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அதில் இணை ஆணையருக்கே மீட்டனுப்புகை செய்து ஆணையரால் உத்தரவிடப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து O.A.05/2007 என்ற வழக்கிலேயே அறிவிப்பு அனுப்பப்பட்ட போது அந்த 5 நபர்களும் விசாரணைக்கு

No of word : 171
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1 ரூபாய்   १ रूपया
1 Re
COPY STAMP

ஆஜராகாத காரணத்தினால் 05.01.2017 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. 08.02.2011 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உறுதி செய்து 19.08.1911–ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி அதில் கண்ட 5 நபர்களின் தற்கால வாரிசுகளான இந்த மனுதாரர்களை இத்திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலராக நியமிக்க வேண்டி மனுவில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தக்கார்/செயல் அலுவலரால் கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திருக்கோயிலை வெண்டாக்கோட்டை கிராமத்தில் வாழ்ந்து வந்த வேளாளர் வகுப்பினர், செட்டியார் இனத்தினர் தொண்டமான் வகையறாக்கல், முதலியார் வகுப்பினர்களால் நிலங்கள் கொடுக்கப்பட்டது. என்று சொல்வதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. ROR–ன் படி சர்வே எண் 111 ஸ்ரீசுப்ரமணி சுவாமி கோயில் பெயரில் உள்ளது. ஆனால் தற்போதைய சிட்டாவில் அருள்மிகு சுப்ரமணி சுவாமி மற்றும் 5 நபர்கள் என்று உள்ளது. இந்த நபர்கள் எவ்வாறு கோயில் நிலத்தில் கூட்டாக வந்தார்கள் என்ற விவரம் மற்றும் ஆவணம் இல்லை. மேற்படி வேளாளர் வகுப்பினர் செட்டியார் இனத்தினர் தொண்டைமான் வகையறாக்கள், முதலியார் வகுப்பினர்களால் நிலங்கள் எழுதி கொடுக்கப்பட்டது என்ற ஆதாரமும் ஆவணங்களும் இல்லை. மேற்படி நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு தினசரி பூஜைகள் விளக்கு ஏற்றுதல், பூஜகர் ஊதியம், மற்றும் திருக்கோயில் பராமரிப்பு போன்ற வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்ற விவரம் இல்லை.

மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, 1911 ம் ஆண்டு மேற்படி கிராமத்தை சேர்ந்த 4 கரைக்காரர்களில் 23 வகையறாக்களில் இருந்து 1. கோவிந்தசாமி வேளாளர் 2. ராசப்பா வேளாளர் 3. சொக்கலிங்க செட்டியார் 4. கோவிந்த நாயக்கர் 5. ரெங்கசாமி முதலியார் ஆகிய 5 நபர்களும் மேற்படி திருக்கோயிலின் தலைமைக் காரர்களாக இருந்து கோயில் விசயங்களை அதில் வரும் வருமானங்களை பாதுகாத்து கோயிலுக்கு செய்ய

No of word : 175
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

வேண்டிய காரியங்களை செய்தும் திருவிழாக்களை நடத்தியும், ஒவ்வொரு வருடத்திலும் வரும் வரும்படிக்கும் செலவுக்கும் கணக்கு ஏற்படுத்தி, ஒவ்வொரு தலைமையான கரைக்காரர்களிடம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு விவரம் கொடுக்க வேண்டியது என பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இப்பத்திரத்தில் நாம் (4 கரைக்காரர்கள்) பத்து வருடத்திற்கு மேலே கண்ட ஐவருக்கும் நாம்(4 கரைக்காரர்கள்) பாத்தியத்தை கொடுத்திருப்பதால், அதற்கு மேல் இதில் கண்டவர்களும், அவர்களின் வாரிசுகளும் மேலே கண்ட 5 பேர்களையாவது அல்லது அவர்களது பிரியப்படி நடந்து கொள்வது என பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் அவர்களுக்குள் நபர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அந்த ஆவணம் இந்து சமய அறநிலையத்துறையை கட்டுப்படுத்தாது.

5-மனுவில் கூறப்பட்டுள்ளது போல் மேற்படி நபர்களின் வாரிசுகளும் டிரஸ்டிகளாக இருந்து நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்று கூறியுள்ளது சுத்தப் பொய். தற்பொழுது 5 நபர்களில் கோவிந்தசாமி வேளாளர் இறந்து விட்டார். அவரது வாரிசு வீரசுந்தரி கோவிந்தசாமி வேளாளர் என்பவர் அவருக்காக பொறுப்பில் டிரஸ்டியாக இருந்து வருகிறார் என்பது தவறு. மேற்படி 2வது நபரான ராசப்பா வேளாளரும் இறந்து விட்டார் அவரது வாரிசுதாரரான நடன சபாபதி டிரஸ்டியாக இருந்து வருகிறார் என்பது தவறு. அதே போல் மற்ற மனுதாரர்கள் மேற்படி திருக்கோயிலில் டிரஸ்டியாக இருந்து நிர்வாகம் பார்த்து வருகிறார்கள் என்பது தவறு. மேற்படி கோயில் நிர்வாகத்தை இந்து சமய அறநிலையத்துறை தக்கார் /செயல் அலுவலர் நிர்வாகம் செய்து வருகிறார். மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, பரம்பரை அறங்காவலர் நியமிக்க வேண்டி தஞ்சாவூர் இணை ஆணையர் நீதிமன்றத்தில் OA.NO.5/2007, மேற்படி திருக்கோயிலில் தக்கார்/செயல் அலுவலரை எதிர்மனுதாரராக காட்டி மனு தாக்கல் செய்து கடந்த 08.02.2011 ம் தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் இந்து சமய

No of word : 174
No of correction : Nil ·

19

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Rs.

COPY STAMP

அறநிலையத்துறை ஆணையர் முன்பாக A.P.14/2012 என மேல்முறையீடு செய்து, கீழமை நீதிமன்றத்திற்கே (இணை ஆணையருக்கு) Denova Enquiry ஆக அனுப்பப்பட்டதில் அந்த 3 பேரையும் மேலும் 2 நபர்களையும் சேர்த்து விசாரணைக்கு அதே OA.No.5/2007 என்ற வழக்கிலேயே அறிவிப்பு அனுப்பப்பட்ட போது மேற்படி 5 நபர்களும் ஆஜராகாத காரணத்தினால் 05.01.2017ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.

எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்கள் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் பரம்பரை அறங்காவலர்கள் கோர இயலாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தக்கார்/செயல் அலுவலரால் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | 25.02.2024- செயல் அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் தஞ்சாவூர் அவர்களுக்கு எழுதிய கடிதம் |
| 2. | சர்வே எண்.111-க்கு அ பதிவேடு |
| 3. | 24.02.2024-தேதிய சர்வே எண். 111-க்கு கணினி சிட்டா |
| 4. | சர்வே எண். 111-க்கு Records of Rights Register |
| 5. | 19.08.1911-ல் செட்டில்மெண்ட் பத்திரம் – நகல் |
| 6. | 08.02.2011-ல் ஓ.ஏ.5/2007 உத்தரவு சான்றிட்ட நகல் |

இந்த அசல் மனு நிலுவையில் இருக்கும்போது திரு. சக்திவேல், திரு. ரெகுமூர்த்தி. திரு. சதாசிவம் ஆகியோர்கள் தன்னையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் ஐ.ஏ.எண்.31/2024 மற்றும் திரு. சுவாமிநாதன், திரு. பழனிவேல் ஆகியோர்களையும் தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் ஐ.ஏ.எண்.32/2024. இந்த இரண்டு ஐ.ஏ மனுக்களும் அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

No of word : 153

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய் १ रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. துரை தியாகராஜன் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்தார். மனுதாரர் தரப்பில் முதல் சாட்சியாக P.W.1 மனுதாரர் திருமதி. வீரசுந்தரி, க/பெ. கோவிந்தராஜ் என்பவரால் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. இப்பிரமாண வாக்குமூலத்தில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் 200 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் கிராமத்தை சேர்ந்த வேளாளர், செட்டியார், தொண்டமான், முதலியார் வகுப்பினர்களால் கட்டப்பட்டு அதன் வருமானத்திற்கு நிலங்கள் எழுதிக் கொடுத்து அதிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு கோவிலின் பராமரிப்புக்கு பயன்படுத்தப்பட்டு மனுதாரர்களின் மூதாதையர்கள் பரம்பரையாக அறங்காவலர்களாக இருந்து நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னிட்டு மேற்படி
வகுப்பை சேர்ந்தவர்களால் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் 19.08.11 அன்று எழுதி பதிவு செய்யப்பட்டு அதன்படி மேற்படி கோவில் மற்றும் அதன் உப கோவில்களான எங்கள் ஊரில் இருக்கும் மாரியம்மன் கோயில், அய்யனார் கோயில், முனி கோவில் ஆகியவற்றை நிர்வகிக்க எங்கள் ஊரைச் சேர்ந்த (1) கோவிந்தசாமி வேளாளர், (2). ராஜப்பா வேளாளர், (3). சொக்கலிங்க செட்டியார், (4) கோவிந்த நாயக்கர், (5). ரெங்கசாமி முதலியார் ஆகிய ஐந்து பேர்களும் தலைமை காரர்களாக இருந்து நடத்த வேண்டியதென தீர்மானிக்கப்பட்டது. மேற்படி 5 நபர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகள் பரம்பரையாக அறங்காலர்களாக மேற்படி கோவில்களின் நிர்வாகத்தை நடத்தி வருவதென ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி 5 தலைமை காரர்களில் எனது கணவரின் கொள்ளுப் பாட்டனாரும் முதலாவது நபருமான கோவிந்தசாமி வேளாளர் இறந்துவிட்டார்; அவரது வாரிசான கொள்ளுப் பேரனும் எனது கணவருமான தர்மராஜ் வேளாளரின் மகன் கோவிந்தசாமி வேளாளர் வெளியூரில் வசித்து வருவதால் அவரது வாரிசான நான்

No of word : 172
No of correction : Nil

23

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re. COPY STAMP ایک روپیہ

பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறேன். மேற்படி 2-வது நபரான ராஜப்பா வேளாளரும் இறந்து விட்டார்; தற்போது அவரது வாரிசும் கொள்ளுப் பேரனுமான நடனசபாபதி பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார். மேற்படி 3-வது நபரான சொக்கலிங்கம் செட்டியாரும் இறந்து விட்டார்; தற்போது அவரது வாரிசும் கொள்ளுப் பேரனுமான இளங்கோவின் மகனான சிவகுரு பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார். மேற்படி 4-வது நபரான அருணாசல தொண்டமானும் இறந்து விட்டார்; தற்போது அவரது வாரிசும் கொள்ளுப் பேரனுமான ராமலிங்க தொண்டைமான் மகன் ராஜேந்திரன் தொண்டமான் பரப்பரை அறங்காவலராக இருந்து வருகிறார். மேற்படி 5-வது நபரான ரங்கசாமி முதலியாரும் இறந்து விட்டார்; தற்போது அவருக்கு பிறகு அவரதுவாரிசும் கொள்ளுப் பேரனுமான ரெங்கசாமி முதலியார் மகன் திருத்தணிவேல் பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார். அதன்படி பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்களான நானும் இதர மனுதாரர்களும் தான் நிர்வாகம் பார்த்து வருகிறோம். தற்போது இந்து சமய அறநிலையத்துறை சட்டம் வந்த பிறகு கோவில் நிர்வாகத்தை கண்காணிக்க ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மேற்படி தலைமை காரர்களில் முதலாவது நபரான கோவிந்தசாமி வேளாளரின் வாரிசு என்று ராமசாமி வேளாளரும் மற்றும் இரண்டாவது நபரான ராஜப்பா வேளாளரின் வாரிசு என்று பழனிவேலு வேளாளரும் உண்மைக்கு மாறாக கூறி சமூகம் நீதிமன்றத்திலேயே *O.A.5/2007* என்ற மனுவை இதர நபர்களுடன் சேர்ந்து தாக்கல் செய்து; அந்த மனுவில் அ/மி. சுப்பிரமணிய சுவாமி கோவில் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ள கோவில் என்று தீர்மானிக்கப்பட்டு அறங்காவலர்களாக ராமசாமி வேளாளர், பழனிவேலு வேளாளர், சோலைவாசன், ராஜேந்திர தொண்டைமான், ரெங்கசாமி முதலியார் ஆகியோரை நியமித்து 08.02.2011-ல் உத்தரவு

No of word : 169
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவை எதிர்த்து எங்கள் ஊரைச் சேர்ந்த சிங்காரவேலு, நடேசன், திருநீலகண்டர் ஆகியோரால் ஆணையர் முன்பாக A.P.14/12 என்ற மேல்முறையீடு செய்யப்பட்டு அதில் இணை ஆணையருக்கே மீண்டும் புதுவிசாரணை செய்ய உத்தரவு அனுப்பப்பட்டதில் O.A.5/07 வழக்கினை இணை ஆணையர் அவர்கள் மீண்டும் விசாரணைக்கு எடுத்து மனுதாரர்கள் ராமசாமி வேளாளர் வகையறாவினருக்கு அறிவிப்பு அனுப்பிய போது அவர்கள் விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் 05.01.17 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி அ/மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மனுதாரர்களின் முன்னோர்களான எங்கள் கிராமத்தை சேர்ந்த்த வேளாளர், செட்டியார், தொண்டமான், முதலியார் வகுப்பினர்களின் தலைமைக்காரர்களால் பரம்பரை அறங்காவலர்களாக தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வந்து தற்போது அவர்களது வாரிசுகளான மனுதாரர்கள்

பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்களாக செயல்பட்டு வருகின்றனர் என்பதற்கு ஆதாரமாக இன்றளவும் 19.08.1911-ஆம் ஆண்டில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஒப்பந்தத்தை தவிர்த்து கோவில் நிலங்களின் வருவாய் ஆவணங்கள் மனுதாரர்களின் மூதாதையர்கள் பெயரிலயே அவர்களை அறங்காவலர்களாக காட்டி நிற்கிறது. எனவே அ/மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்களாக செயல்பட்டு வரும் நான் உட்பட மனுதாரர்களை அங்கீகரித்து ஏற்று எங்களுக்கு பரம்பரை உரிமை வழங்கும்படியும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையில் மனுதாரர் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

No of word : 128
No of correction : Nil

ONE RUPEE

1 ரூபாய் १ रुपया

TRUTH ALONE TRIUMPHS

COPY STAMP

| | | |
|---|---|---|
| 1. | ம.த.சா.1 | 19.12.1911–ம் ஆண்டு செட்டில் மெண்ட் ஆவணம் நகல் (ஆட்சபேனையுடன்) |
| 2. | ம.த.சா.2 | தர்மராஜ் வேளாளர் இறப்பு மற்றும் வாரிசு சான்று நகல் (ஆட்சபேனையுடன்) |
| 3. | ம.த.சா.3 | ஓ.ஏ.05/2007 ன் வழக்கு தீர்ப்பின் அசல் |
| 4. | ம.த.சா.4 | கோவில் நிலத்தின் வருவாய் ஆவணங்கள் அசல் (ஆட்சபேனையுடன்) |
| 5. | ம.த.சா.5 | முதல் மனுதாரருக்கு வி.ஏ.ஓ வழங்கிய சான்று அசல் |
| 6. | ம.த.சா.6 | பரம்பரை வழி சாரா அறங்காவலர் நியமன RTI தகவல் அசல் |
| 7. | ம.த.சா.7 | புதிய தேர் கட்டுமான வரவு செலவு கணக்குகள் அசல் |

1–ம் எதிர் மனுதாரரான செயல் அலுவலர் தரப்பில் 1–ம் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் அவர் கீழ்காணுமாறு வாக்குமூலம் அளித்துள்ளார். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான்தான் சொன்னேன். நிருபண வாக்குமூலத்தில் எனது வயது 56 என்று சொல்லி உள்ளேன். எனது பிராமாண வாக்குமூலத்தில் 54 என்று உள்ளது. என்னுடைய பிராமாண வாக்குமுலத்தில் நான் சுப்ரமணியசுவாமி திருக்கோயில், வெண்டாக்கோட்டை பரம்பரை அறங்காவலருமான என்று சொல்லி உள்ளேன். எனது பிராமாண வாக்குமுலத்தில் கடைசி பத்தியில் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கு பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர்களாக நீதி நலன் கருதி நியமித்து உத்தரவிட பிரார்த்திக்கிறேன் என்று சொல்லி உள்ளேனா நான் பரம்பரை அறங்காவலர் என்பதற்கான உத்தரவு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் எனவும், நான் தற்போது அறங்காவலர் இல்லை ஆனால் எனது நிருபண வாக்கு மூலத்தில் அறங்காவலர் என்று போட்டுள்ளேன் என்றால் சரியல்ல எனவும், என்னுடைய பிராமாண வாக்குமுலத்தில் பத்தி 1ல் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறேன் என்று பொய்யாக சொல்லவில்லை எனவும், என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில்

No of word : 175

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Rc.
COPY STAMP

பத்தி 2ல் வேளாளர், செட்டியார் கல்லர் மற்றும் முதலியார் வகுப்பினரை சேர்ந்தவர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகிறார்கள் அவர்கள் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை எனவும், மனு கோயில் 200 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தது எனவும், பிரமாண வாக்குமுலத்தில் பாரா 3ல் எங்கள் கிராமத்தை சேர்ந்த வேளாளர், செட்டியார் தொண்டமான் மற்றும் முதலியார் வகுப்பினர்கள் எவ்வளவு நிலம் கோயிலுக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்ற விபரம் குறிப்பிடவில்லை. பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளோனா என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமி வேளாளர், ராஜப்பா வேளாளர், சொக்கலிங்கசெட்டியார் கோவிந்தசாமி நாயக்கர், ரெங்கசாமி முதலியார் ஆகிய 5 பேர்களும் கோயிலுக்கு தலைமைகாரர்களாக இருந்து நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது என்று சொல்லி உள்ளதற்கு ஏதேனும் எழுத்து பூர்வமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஒ.ஏ.எண்.05/2007 என்ற வழக்கு போடப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஒ.ஏ எண்.05/2007 வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்னுடைய கணவர்தான் தரப்பினராக உள்ளார். மேற்படி வழக்கு எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்பது பற்றி தெரியும். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.3–ல் நானோ எனது கணவரோ தரப்பினராக இல்லையென்றால் சரிதான். ஒ.ஏ எண்.05/2007 என்ற வழக்கில் மேல்முறையீடு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. A.P.No.14/2012 ல் மேல்முறையீடு செய்து கீழமை நீதிமன்றத்திற்கு டினோவா விசாரணை செய்ய சொல்லி அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனவும், ஒ.ஏ.எண்.05/2007 என்ற வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனவும், மீண்டும் அதே நபர்கள் அதே வழக்கெழு மூலம் இருப்பதனால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டிய வழக்கு என்றால்

No of word : 171
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

சரியல்ல எனவும், தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை அதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது மேல்முறையீடு தான் செய்ய வேண்டுமே தவிர இதே நீதிமன்றத்தில் அசல் வழக்காக தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல எனவும், அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயிலுக்கு வெவ்வேறு சாதியினர் அறங்காவலர் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல. அவ்வாறு வெவ்வேறு சாதியினர் அறங்காவலர்களாக நியமிக்க கோர முடியாது என்றால் சரியல்ல எனவும், மேற்படி சுப்ரமணியசுவாமி கோயிலானது இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில் என்றால் சரிதான். இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில் என்று உள்ளபோது அறங்காவலர் உரிமை கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல எனவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

2,3,4-ம் எதிர் மனுதாரர்கள் தரப்பில் 1-ம் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் அவர் முதன்முதலில் வழக்கறிஞர் கே.வைத்திலிங்கம் மூலம் தாக்கல் செய்த மனுவில் ஓ.ஏ.05/2007 என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், திருத்திய மனு தற்போது ஓ.ஏ.07/2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நியாபகமில்லை எனவும், முதல் மனுவில் வம்சாவளி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களுடைய வம்சம் கோவிந்தசாமி வேளார் வம்சம் மட்டும்தான் என்று மனு தாக்கல் செய்துள்ளோம் எனவும், இரண்டாவதாக தாக்கல் செய்த மனு எண்.07/2024ல் கோவிந்தசாமி வேளார், ராஜப்பா வேளார், சொக்கலிங்கம் செட்டியார், கோவிந்த நாயக்கர், ராஜேந்திர தொண்டைமான் ரெங்கசாமி முதலியார் வம்சம் திருத்தணிவேல் ஆகியோரும் இந்த வம்சாவளியை சேர்ந்தவர்கள்தான் என்று குறிப்பிட்டு வம்சாவளி பட்டியல் இணைத்துள்ளேன் எனவும், என் கணவர் தற்போது வெளியூரில் இருக்கிறார் எனவும்,

No of word : 169
No of correction : Nil

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re

COPY STAMP

என் கணவர் வெளிநாட்டில் வசிப்பவர் என்று குறிப்பிட்டுள்ளேன் எனவும், கே.வைத்திலிங்கம் வழக்கறிஞர் மூலமாக மனு தாக்கல் செய்யும்போது 13.02.2024 அன்று என் கணவர் லண்டனில் வெளிநாட்டில் வசித்துவந்தார் எனவும், அவர் அங்கு சொந்தமாக கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார் எனவும், லண்டனில் எந்த முகவரியில் வசித்தார் என்றால் தற்போது நியாபகமில்லை எனவும், வாக்குமூலம் அளித்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஓ.ஏ.எண். 07/2024 வழக்கினை 4 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தொடர்ச்சியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை நடைப்பெற்று வந்த நிலையில் கடந்த 16.04.2024 அன்று இந்த கோப்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டு விசாரணையானது பாதியில் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வழக்கினை 4 மாத காலத்திற்குள் முடிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் WP (MD) 13928/2024 உத்தரவிடப்பட்ட நிலையில் இவ்வழக்கினை உடன் முடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தங்கள் தரப்பு வசம் உள்ள ஆவணங்கள் மற்றும் எழுத்து மூல வாதுரையும் வரும் 14.05.2025 க்குள் இணை ஆணையரிடம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக கீழ்காணுமாறு எழுத்து மூல வாக்குமூல வாதுரை மற்றும் ஆவணங்கள் இணைப்பில் கண்டுள்ளவாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டையில் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமையான கோவில் அ/மி. சுப்பிரமணியசுவாமி கோவிலாகும். அந்த கோவிலின் பராமரிப்புக்காக அந்த கிராமத்தை சேர்ந்த வேளாளர். செட்டியார், கள்ளர் இன தொண்டமான், முதலியார் ஆகிய வகுப்பினர்களால் நிலங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டு அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வந்தது. கோவிலின் நிர்வாகத்தை சீரமைக்க அக்கால ஊர் முக்கியஸ்தர்களான வகுப்பாரை சேர்ந்தவர்கள்

No of word : 173

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re. COPY STAMP

ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் 19.08.1911-ல் எழுதி வைத்துள்ளார்கள். அந்த ஆவணத்தில் அ/மி. சுப்பிரமணியசுவாமி கோவில் மற்றும் அதன் உபகோவில்களாக அதே ஊரில் இருக்கும் மாரியம்மன் கோயில், அய்யனார் கோயில், முனி கோவில் ஆகியவைகளையும், அதன் சொத்துக்களையும் நிர்வகிக்க அதே ஊரைச் சேர்ந்த கோவிந்தசாமி வேளாளர் (1), ராஜப்பா வேளாளர் (2), சொக்கலிங்கம் செட்டியார் (3), கோவிந்த நாயக்கர் (4), ரெங்கசாமி முதலியார் (5) ஆகிய ஐந்து பேர்களும் தலைமைக்காரர்களாக இருந்து நடத்தி வருவதெனவும் மேலும் ஷ 5பேர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகள் நிர்வகித்து வருவதெனவும் அதில் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

2. தற்போது மேற்படி 5 நபர்களில் 1வதுநபரான கோவிந்தசாமி வேளாளருக்கு பிறகு அவரது வாரிசான முதல் மனுதாரர் வீரசுந்தரியும்; 2-வது நபரான ராஜப்பா வேளாளருக்கு பிறகு அவரது வாரிசான இரண்டாவது மனுதாரர் நடனசபாபதியும்; 3-வது நபரான சொக்கலிங்கம் செட்டியாருக்கு பிறகு அவரது வாரிசான 3-வது மனுதாரரான சிவகுரு இளங்கோவும்; 4-ம்நபரான அருணாசல தொண்டமானுக்கு அவரது வாரிசான ராஜேந்திரன் தொண்டமானும்; 5-வது நபரான ரங்கசாமி முதலியார் இறந்த பிறகு அவரது வாரிசு திருத்தணிவேல் என்பவரும் டிரஸ்டிகளாக இருந்து நிர்வாகம் பார்த்து வருகிறார்கள். 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய துறை சட்டம் வந்த பிறகு 1972-வாக்கில் மனுக் கோவில் நிர்வாகத்தை கண்காணிக்க ஒரு தக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

3. மேற்படி பரம்பரை அறங்காவலர்களில் மேற்படி 1வதுநபரான கோவிந்தசாமி வேளாளரின் வாரிசு என்று வழக்கறிஞர் ராமசாமி என்பவரும்; 2-வது நபரான ராஜப்பா வேளாளரின் வாரிசு என்று பழனிவேல் என்பவரும் பொய்யாக கூறி O.A.5/07-ஐ தாக்கல் செய்து மனு கோவிலுக்கு தங்களை பரம்பரை அறங்காவலர்கள் என்று 08.02.11 அன்று

No of word : 171
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP



உத்தரவு பெற்றனர் என்றும்; அதனை ஆட்சேபித்து சிங்காரவேலு, நடேசன், திருநீலகண்டர் ஆகியோரால் ஆணையர் முன்பாக மேல்முறையீடு (A.P.14/2012) செய்ததில் மேற்படி O.A.5/07-ஐ இணை ஆணையருக்கே DENOVA ENQUIRY செய்ய மீண்டும் அனுப்பப்பட்டதில் அதனை மீண்டும் விசாரணைக்கு எடுத்து அறிவிப்பு அனுப்பப்பட்ட போது ஷ O.A.5/07-ல் கண்ட மனுதாரர்கள் விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் அந்த வழக்கு 05.01.17 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், தற்போது உண்மையான பரம்பரை அறங்காவலர்களான ஷூ 5நபர்களில் 1வதுநபரான கோவிந்தசாமி வேளாளரின் வாரிசான முதல் மனுதாரர் வீரசுந்தரியையும்; 2-வது நபரான ராஜப்பா வேளாளரின் வாரிசான இரண்டாவது மனுதாரர் நடனசபாபதியையும் இம்மனுவில் சேர்த்து அதன்படி O.A.5/07-ல் 08.02.11 அன்று ஏற்பட்ட உத்தரவில் கண்ட முக்கிய

விசயமான மனு கோவில் பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ள கோவில் என்ற உண்மை சங்கதியை மட்டும் தங்களுக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு 19.08.1911-ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட்டில் கண்ட ஒப்பந்தப்படி அதில் கண்ட 5தலைமைக்காரர்களின் தற்கால வாரிசுகளான இவ்வழக்கின் மனுதாரர்களை பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக அங்கீகரித்து நியமனம் செய்து உத்தரவிட மனு அளித்துள்ளனர்.

II. முதலாவது எதிர்மனுதாரரின் எதிருரை வருமாறு:-

1. மனுவில் கண்ட அ/மி சுப்ரமணிய சுவாமி கோவில் 200ஆண்டுகளுக்கு முந்தைய கோயில் என்பது இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும்; மேற்படி கோவிலுக்கு மனுவில் கண்ட 4கரைதாரர்களால் நிலங்கள் எழுதிக கொடுக்கப்-பட்டதற்கு ஆதாரம் இல்லை என்றும்; ROR-ன்படி புலஎண்.111 ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில் பெயரில் உள்ளது என்றும், ஆனால் தற்போதைய சிட்டாவில் அ/மி சுப்ரமணிய சுவாமி கோவில் மற்றும் 6நபர்கள் என்று உள்ளது என்றும்; இந்த 6நபர்கள் எவ்வாறு

No of word : 175

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

கோவில் நிலத்தில் கூட்டாக வந்தார்கள் என்ற விவரம் மற்றும் ஆவணம் இல்லை என்றும்; மேற்படி வேளாளர், செட்டியார், தொண்டமான் வகையறாக்கள், முதலியார் ஆகியோரால் நிலங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்றும்; மேற்படி நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு தினசரி பூஜை மற்றும் கோவில் பராமரிப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு விவரம் இல்லை என்றும் கூறியுள்ளார்கள்.

2. மேலும் 1911-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் தனிப்பட்ட நபர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அந்த ஆவணம் இந்து சமய அறநிலைத்துறையை கட்டுப்படுத்தாது என்றும் எதிருரையில் கூறியுள்ளனர்.

3. மேலும் செட்டில்மெண்ட்டில் கண்ட தலைமைக்காரர்களின் வாரிசுகள் தான் தற்போது பரம்பரை டிரஸ்டிகளாக இருந்து நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்று கூறுவது சுத்தப் பொய் என்றும் எதிருரையில் கூறியுள்ளனர்.

III. 2முதல் 4எதிர்மனுதாரர்களின் எதிருரை வருமாறு:-

1. மனுதாரர்கள் ஷ வழக்கில் எதிர்மனுதாரராக முதல் எதிர்மனுதாரரான தக்காரை மட்டும் சேர்த்து வழக்கினை தாக்கல் செய்து அதனை இந்நீதிமன்றம் கடந்த 01.03.24 அன்று கோப்பில் எடுத்து அதன்படி 14.03.24 அன்று வாய்தா நிர்ணயித்து முதல் எதிர்மனுதாரரான தக்காருக்கு இவ்வழக்கின் அறிவிப்பினை அனுப்பியுள்ளது. முதல் எதிர்மனுதாருக்கு அறிவிப்பு அனுப்பிய உடனே அதனை தெரிந்து கொண்ட 2முதல் 4எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் K.சுந்தரமூர்த்தி அவர்கள் மூலம் தங்களை மனுக் கோவிலுக்கு அறங்காவலராக நியமிக்க வேண்டும் என்றும் அதற்காக தங்களை வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டும் என்றும் தனித் தனியாக 14.03.24 அன்றே மனுக் கொடுத்து அதனை இந்நீதிமன்றம் ஒரே மனுவாக I.A. 31 / 2024 என்று கோப்பில் எடுத்து அம்மனுப்படி அவர்களை தரப்பினர்களாக மட்டும் சேர்க்க 31.12.24 அன்று

No of word : 170
No of correction : Nil

ONE RUPEE
1ரூபாய் १रुपया
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

உத்தரவிட்டது. அதன்படி மனுதாரர்கள் அவர்களை வழக்கில் 2முதல் 4எதிர்மனுதாரர்களாக சேர்த்து கடந்த 13.03.25 வாய்தா அன்று மனுதாரர்கள் திருத்தல் மனு தாக்கல் செய்த போது முதல் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரை தவிர மற்ற எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர்கள் எவரும் ஆஜராகவில்லை. இந்நீதிமன்றம் உயர்நீதிமன்ற காலக் கெடு வழக்கு என்பதால் எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர்கள் ஆஜராகி நகல் பெற கூடுதல் அவகாசம் எதுவும் வழங்காமல் அன்றே திருத்தல் மனுவை அன்றைய வாய்தாவில் ஆஜராகியிருந்தவர்களான முதல் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கும், ஆறாவது எதிர்மனுதாரருக்கும் மற்றும் வழக்கில் தரப்பினராக இல்லாமல் வாய்தா வாய்தாவுக்கு எதிர்மனுதாரர்களுடன் ஆஜராகி வரும் நபரான புருசோத்தமன் என்பவரும் மற்றும் ஒருவரும் கையெழுத்திட்டு நகல் பெற்றனர். ஆனால் வழக்கில் கடைசிவரை 2முதல் 4எதிர்மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞர் K.சுந்தரமூர்த்தி அவர்கள் மூலமாக தனியாக எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே ஷ 2முதல் 4எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் வழக்கினை ஒத்துக் கொண்டு ஆட்சேபனை எதுவும் செய்யாதவர்கள் என்றே இந்நீதிமன்றம் கருத வேண்டும்.

IV. 5 மற்றும் 6 எதிர்மனுதாரரின் எதிருரை வருமாறு:-

1. மேற்படி 5 & 6எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் V.கிருஷ்ணசாமி அவர்கள் மூலம் தங்களை மனுக் கோவிலுக்கு அறங்காவலராக நியமிக்க வேண்டும் என்றும் அதற்காக தங்களை வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டும் என்று மட்டுமே I.A.32/2024 மனுவினை 25.04.24 அன்று தாக்கல் செய்து அம்மனுப்படி அவர்களை தரப்பினர்களாக சேர்க்க இந்நீதிமன்றம் 31.12.24 அன்று உத்தரவிட்டது. அதன்படி அவர்கள் வழக்கில் 5&6எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

2. மேற்படி 5 & 6 எதிர்மனுதாரர்களை வழக்கில் சேர்த்தவுடன் தங்களது வழக்கறிஞர் மூலமாக தனியாக எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால்

No of word : 167
No of correction : Nil

43

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re COPY STAMP

மேற்படி 5 & 6எதிர்மனுதாரர்கள், அவர்களை மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு முன்பே 27.06.24 அன்று 2 முதல் 4எதிர்மனுதாரர்களுக்காக எதிருரையை தாக்கல் செய்வதாக கூறி தங்களது வழக்கறிஞர் V.கிருஷ்ணசாமி மூலம் தாக்கல் செய்துள்ளார்கள். அன்றைய வழக்கு நிலையில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் என்று எவருமில்லை. எனவே திருத்தல் மனுவிற்கு பிறகாவது ஷெ 5 & 6எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையை திருத்தி புதிதாக தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு தாக்கல் செய்யாததால் வழக்கின் தரப்பினர்களோ நீதிமன்றமோ ஷெ V.கிருஷ்ணசாமி அவர்கள் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் என்று காட்டி தாக்கல் செய்துள்ள எதிருரையை இவ்வழக்கின் ஷெ5&6எதிர்மனுதாரர்களுக்கானது என்று கருதி (Presumption) செயல்பட முடியாது.

3. மேற்படி 5 & 6 எதிர்மனுதாரர்கள் தங்களது I.A.32/2024 Party Impleading மனுவில் மனுதாரர்களின் வழக்கில் கண்ட சங்கதிகளை குறிப்பாக கூறி எதனையும் மறுக்காமலும்; மனுதாரர்களின் வழக்கில் எங்களுக்கு ஆட்சேபனை உள்ளதால் தங்களை தரப்பினராக சேர்த்தவுடன் வழக்கு சங்கதிகளை மறுத்து முழுமையான எதிருரை தாக்கல் செய்வதாகவோ கூட எதனையும் கூறாமல் தங்களை மனுக் கோவிலுக்கு அறங்காவலராக நியமிக்க வேண்டும் என்று மட்டும் மனுவில் கூறியுள்ளனர்.

4. இந்நிலையில் I.A.32/24 Party Impleading மனுவில் கண்ட சங்கதிகளை தவிர புதிதாக ஆட்சேபனை எதனையும் மேற்படி 5 & 6 எதிர்மனுதாரர்கள் எழுப்ப முடியாது. மேலும் மேற்படி V.கிருஷ்ணசாமி அவர்கள் 27.06.24 அன்று தாக்கல் செய்துள்ள எதிருரையில் N.சக்திவேலை எதிர்மனுதாரராக காட்டியுள்ளார். ஆனால் அவரது வக்கலத்துப்படி சக்திவேல் என்று எவருமில்லை. இந்நிலையில் மேற்படி 5& 6 எதிர்மனுதாரர்கள் வழக்கில் எதிருரை எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றே

No of word : 170

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

நீதிமன்றம் கருதி செயல்பட வேண்டும் என்று மனுதாரர்கள் பணிவுடன் தெரிவிக்கிறார்கள்.

IV. மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்கள்:-

1. முதல் மனுதாரர் (P.W.1).

2. அசோக்குமார் (P.W.2).

முதல் மனுதாரர் மூலம் குறியிட்ட ஆவணங்கள்:-

i). 1911-ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல்.

ii). O.A. 5/2007 வழக்கில் கண்ட உத்தரவு.

iii). மனுக் கோவில் நிலத்தின் வருவாய் ஆவணங்கள்.

iv). மனுக் கோவில் நிலத்தின் ஆன்லைன் நிலஉரிமை விபரங்கள்.

v). மனுதாரர்களுக்கு கி.நி.அ. வழங்கிய சான்றுகள்.

vi). முதல் மனுதாரரின் மாமனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்று.

vii). மனுதாரர்கள் தரப்பில் புதிய தேர் செய்ததற்கான செலவுக் கணக்கு.

1. மனுதாரர்கள் தரப்பில் ஐந்து மனுதாரர்களையும் மற்றும் அவர்களுக்காக அவர்களது தரப்பில் ஐந்து சாட்சிகளையும் மற்றும் பொதுவான சாட்சிகள் இருவரையும் விசாரித்து அதனுடன் ஆவணங்கள் தாக்கல் செய்ய உள்ளதாக மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு இந்நீதிமன்றம் உயர்நீதிமன்றத்தால் காலக் கெடு நிர்ணயிக்கப்பட்ட வழக்கு விரைவாக முடிக்க வேண்டும் என்று கூறிய போது ஒவ்வொரு வாய்தாவிற்கும் இரு சாட்சிகளை குறுக்கு விசாரணை முடிந்தவுடன் உடனுக்கு உடன் விசாரிப்பதாக மனுதாரர்கள் தரப்பில் உறுதி கூறப்பட்டது.

2. அதன்படி மனுதாரர்கள் தரப்பில் 04.04.25 அன்று முதல் மனுதாரரை P.W.1 ஆக தனது முதல் விசாரணையை நிருபண வாக்கு மூலமாக தாக்கல் செய்தார். அவரை அன்று முதல் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மட்டுமே குறுக்கு விசாரணை செய்தார். 2 முதல் 4எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் உட்பட எவரும் ஆஜராகவில்லை. ஆனால்

No of word : 161
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re. COPY STAMP

5&6எதிர்மனுதாரர்கள் தரப்பில் அவர்களது வழக்கறிஞர் ஆஜராகி தனக்கு P.W.1–ஐ விசாரிக்க இரண்டு மணி நேர கால அவகாசம் வேண்டும் என்று வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாமலே வழக்கின் வாய்தாவை மாற்றி கேட்டு அதன்படி இந்நீதிமன்றமும் 16.04.25 அன்று ஷ வழக்குக்கு மட்டுமே வாய்தா போடப்பட்டது.

3. இந்நிலையில் முதல் மனுதாரரான P.W.1 தனக்கு ஊரில் எதிர்நிலையில் உள்ளவர்களாக பார்த்து நிறைய நபர்களை மேற்படி 2 முதல் 6எதிர்மனுதாரர்கள் கூட்டி வந்து நீதிமன்றத்தில் சூழ்ந்து நின்றிருந்ததை பார்த்து அச்சத்துடன் குறுக்கு விசாரணைக்கு கூண்டில் ஏறி நின்றார். மேலும் 5 & 6எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் மிக மெதுவாக தனது கருத்துக்களை கூறி வந்த போது மனுதாரர்கள் வழக்கறிஞர் அவரிடம் கொஞ்சம் சத்தமாக represent செய்யுங்கள் என்று கூறியவுடன் 2 முதல் 6எதிர்மனுதாரர்களும் அவருடன் வந்த நபர்களும் மனுதாரர்களுடன் கைகலப்பில் ஈடுபட முயற்சித்தார்கள்.

4. இந்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு 5&6 எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞரும் P.W.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் மறுத்து நின்றார். பின்பு வழக்கை வேறொரு வாய்தா தேதிக்கு மாற்றி தரும்படி கேட்டார். வழக்கு உயர் நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயித்து அதன் பேரில் நடக்கும் வழக்கு என்பதால் அதனை மறுத்து 5 & 6எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று இந்நீதிமன்றம் முடித்து வைத்து விட்டது. பின்பு மனுதாரர்கள் தரப்பில் P.W.2–ஆகவும் முதல் கரைதாரர்களின் சாட்சியாகவும் அசோக்குமார் என்பவர் தனது முதல் விசாரணையை நிருபன வாக்கு மூலமாக தாக்கல் செய்தார். அவரையும் 5&6 எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாமல் நீதிமன்றத்தை விட்டு வெளியேறி விட்டதால் P.W.2–விற்கும் 5 & 6 எதிர்மனுதாரர்களின் தரப்பில்

No of word : 172
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

குறுக்கு விசாரணை இல்லை என்று இந்நீதி–மன்றம் முடித்து வைத்து விட்டது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் மற்ற சாட்சிகளை விசாரிக்க வாய்தா கேட்ட போது வழக்கு உயர்நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயித்து அதன் பேரில் நடக்கும் வழக்கு என்று கூறி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணையையும் முடித்து (Closed) விட்டதால் தற்போது இந்நீதிமன்ற உத்தரவுப்படி தங்கள் வழக்குக்கு எவ்வித பாதகமன்னியில் (without prejudice my clients Claims) மனுதாரர்கள் தரப்பில் இந்த எழுத்துமூல வாதுரையும் அதனுடன் கீழ்கண்ட ஆவணங்களும் தாக்கல் செய்யப்படுகிறது.

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்கள் வருமாறு:–

1. O.A.79/72 வழக்கில் கண்ட பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் ஊர் கிராம மக்களிடம் வாக்குமூலம் பெற்று தாக்கல் செய்துள்ள வாக்கு மூலங்களின் சான்றிட்ட நகல்கள். 2. O.A.79/72 வழக்கில் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்த வாக்கு மூலங்களின் சான்றிட்ட நகல்கள்.

3.1911–ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

4. O.A.5/07 வழக்கில் கண்ட பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் ஊர் கிராம மக்களிடம் வாக்குமூலம் பெற்று தாக்கல் செய்துள்ள ஆய்வுரையின் சான்றிட்ட நகல்.

V. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் குறியிட்ட ஆவணங்கள்:–

எதிர்மனுதாரர்கள் தங்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி I.A.31/24 & I.A.32/24 மனுக்களை தாக்கல் செய்து அம்மனுக்களை இந்நீதிமன்றம் 31.12.24 அனுமதித்து உத்தரவிட்ட பிறகு அவர்கள் எதிருரரையே தாக்கல் செய்யவில்லை. அதனை ஒட்டி .......

1. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

VI. மேற்படி மனு, எதிருரை, சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின்படி மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை விபரம் வருமாறு:–

No of word : 172
No of correction : Nil

51

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1 ரூபாய்  १ रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re.  COPY STAMP

மனுக் கோவில் பற்றி....

1. பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தில் முதல் மனுதாரரின் கணவரான கோவிந்தசாமி வேளாளரின் மூதாதையரான வீரப்பெருமாள் வேளாளர் என்பவர் தற்போது மனுக் கோவில் அமைந்துள்ள இடம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களை தானமாக தர அவரது தலைமையில் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஷெ கிராமத்தின் முதல் கரையான வேளாளர் சமூகம், இரண்டாவது கரையான சேனைத் தலைவரை சேர்ந்த செட்டியார் சமூகம், மூன்றாவது கரையான கள்ளர் சமூகத்தை சேர்ந்த தொண்டமான் வகையறா மற்றும் நான்காவது கரையான முதலியார் சமூகத்தினர் ஆகியோரால் சேர்ந்து சிறிய அளவில் அ/மி. சுப்பிரமணிய சாமியை மூலவராக கொண்டு மனுக் கோவிலும் அதற்கு எதிரே தலவிருட்சமாக உதிரவேங்கை மரமும் மற்றும் சந்திர புஷ்கரணி குளமும் உருவாக்கப்பட்டது. அதனை பின்னிட்டு பல்வேறு கால கட்டங்களில் மனுக் கோவிலுக்கு உபகோவில்களாக அ/மி. அய்யனார் சாமி, அ/மி. தூண்டில்காரர் சாமி, அ/மி.வீரனார் சாமி, அ/மி.மின்னடியான் சாமி, அ/மி. மாரியம்மன், அ/மி. தாதக்காரன் சாமி மற்றும் அ/மி.முனிகோவில் ஆகியன உருவாக்கப்பட்டது.

2. பின்பு மனுக் கோவில் பல்வேறு கால கட்டங்களில் படிப்படியாக கட்டுமானம் மாறி மாறி அந்தந்த கால கட்டத்திலிருந்த மனுதாரர்களின் வகையறா பரம்பரை அறங்காவலர்களால் கட்டப்பட்டு வந்து பின்னிட்டு கடந்த 2008ஆம் ஆண்டில் தற்போதைய நிலையில் உள்ளபடி சைவ சமயத்தின் 8ஆகமங்களில் காரண ஆகமப்படி புதியதாக மனுக் கோவில் எழுப்பட்டு கும்பாபிசேகமும் செய்யப்பட்டது. மேலும் மனுக்கோவில் 1972-க்கு பிறகு இ.ச.அ.துறையின் கட்டுப்பாட்டில் வந்து அதற்கு உரிம எண்ணாக TM015127 என்று கொடுக்கப்பட்டு மேலும் இ.ச.அ. துறையின் இணைய பக்கத்தில் 3026வது வரிசையில் பட்டியலில் சேராத பாரம்பரிய கோவில் என்று

No of word : 169

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

கண்டுள்ளது. மேலும் மனுக் கோவிலும் நிலங்களும் சொத்துக்களும் மனுதாரர்களின் நிர்வாகத்தின் கீழ் தான் பரம்பரையாக உள்ளது.

மனுக் கோவில் நிர்வாக நடைமுறை....

மேற்படி நான்கு கரைதாரர்களும் தங்களுக்கு கீழே உள்ள குடிகளை 23வகையறாக்களாக (Units) பிரித்து ஓடி ஒவ்வொரு கரையிலும் பரம்பரையாக தலைமைக்காரர்களாக இருந்து அந்தந்த கரையை பரிபாலனம் செய்து வந்த மனுதாரர்களின் மூதாதையர்கள் 1. கோவிந்தசாமி வேளாளர், 2. இராஜப்ப வேளாளர், 3. சொக்கலிங்க செட்டியார், 4. கோவிந்த நாயக்கர், 5. ரெங்கசாமி முதலியார் ஆகியோரை தொடர்ந்து மனுக் கோவிலை அவரவர் கரையை பிரதிநிதிபடுத்தும் விதமாக பரம்பரையாக தலைமைக் காரர்களாக (அறங்காவலர்களாக) இருந்து நிர்வகித்து வரவும் அவர்களுக்கு பிறகு மேற்படி தலைமைக்காரர்களின் வாரிசுகளோ அல்லது வாரிசுகளிலிருந்து தேர்வு செய்த நபர்களோ அறங்காவலர்களாக இருந்து மனுக் கோவிலையும் நிலங்களையும் சொத்துக்களையும் நிர்வகித்து வருவது என மேற்படி 23வகையறாக்களின் ஒப்புதலுடன் பட்டுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 19.08.1911 அன்று ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் (எண்.5208/1911) எழுதிக் கொள்ளப்பட்டது.

மனுக் கோவில் அறங்காவலர்கள் தகுதிகள்

1. மனுக்கோவிலுக்கு வழிவழியாக வரும் பரம்பரை அறங்காவலர்களாக வருவதற்கு மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட தலைமைக்காரர்களின் வாரிசுகளிலிருந்து பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தை சேர்ந்த இந்து மதத்தை சேர்ந்த, வேளாளர் வகுப்பில் இருவர், செட்டியார் வகுப்பபை சேர்ந்த ஒருவர், கள்ளர் வகுப்பை சார்ந்த தொண்டைமான் வகையறாவில் ஒருவர், முதலியார் வகுப்பை சேர்ந்த ஒருவர் என உரிய சொத்து மதிப்பும் கொண்ட தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

No of word : 152
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

மனுதாரர்களுக்கான அறங்காவலர்கள் தகுதிகள்

1. மேற்படி பாராவில் கண்டபடி மனுவில் கூறிய மனுதாரர்கள் அனைவரும் பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும்; மேலும் முதல் & இரண்டாம் மனுதாரர்கள் வேளாளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 3வது மனுதாரர் செட்டியார் வகுப்பை சேர்ந்தவர் என்றும், 4வது மனுதாரர் கள்ளர் வகுப்பை சார்ந்த தொண்டைமான் என்றும், 5வது மனுதாரர் முதலியார் வகுப்பை சேர்ந்தவர் என்றும், மேலும் அவர்களுக்கு போதுமான வருமானம் ஈட்டக் கூடிய சொத்து மதிப்பு உள்ளவர்கள் என்றும் தனித் தனியயாக கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று அதனை தங்களது மனுவுடன் இணைத்து தங்கள் தகுநிலையை முதல் நோக்கில் நிருபித்து மனுவை தாக்கல் செய்து உள்ளனர். இதனை எதிர்மனுதாரர்களும் வழக்கில் ஆட்சேபிக்கவும் இல்லை. எனவே மனுதாரர்கள் தங்களை பரம்பரை அறங்காவலராக நியமிக்க கோரும் அடிப்படை தகுதிகளை பெற்றுள்ளனர் என்பதை நிருபித்துள்ளனர். மேலும் மனுக் கோவில் மேற்படி 19.08.11 தேதியிட்ட செட்டில்மெண்ட்டில் கண்டபடி உள்ள ஐந்து தலைமைக் காரர்களின் பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர்களின் நிர்வாகத்தில் உள்ளதால் அதில் கண்ட தலைமைக்காரர்களின் வசாரிசுகள் தான் மனுதாரர்கள் என்பது இத்துடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு கண்டுணர்ந்தாலே தெரியவரும். அதன் விவாத விபரம் பின்னிட்ட பாராக்களில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கான அறங்காவலர்கள் தகுதிகள்

1. அதே நேரத்தில் மேற்படி 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களை போல தாங்கள் இன்ன நாட்டினம், மதம், வகுப்பு, பொருளாதார மதிப்பு சான்று என்று எதையும் கூறி முதல் நோக்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்து நிருபித்துக் கொள்ளவில்லை. எனவே அவர்களை பரம்பரை அறங்காவலர் போட்டிக்கு அவர்களது

No of word : 174
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

I.A.31/24 & 1A.32/24 மனுக்களில் கண்ட அபிடவிட்டின்படி வேண்டுவது போல விண்ணப்பம் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ள முடியாது.

2. மேலும் மேற்படி 19.08.11 தேதியிட்ட செட்டில்மெண்ட்டில் கண்டபடி உள்ள ஐந்து தலைமைக்காரர்களின் நேரடி வாரிசுகளும் கிடையாது. மேலும் 2, 3 & 4வது எதிர்மனுதாரர்கள் 4வது கரையை சேர்ந்தவர்கள். நான்காவது கரைக்கு பரம்பரையாக அதற்கான தலைவர் முதலியார் வகுப்பினரே. எனவே ஷ 2, 3 & 4வது எதிர்மனுதாரர்கள் 4வது கரையின் பிரதிநிதியாகவோ அல்லது 4வது கரையிலிருந்து அவர்கள் வேளாளர் வகுப்பை சார்ந்தவர்களாக இருந்தாலும் முதலாவது கரை –தாரர்களின் பிரதிநிதித்துவத்திலே வந்து அதில் கண்ட தலைமைக்காரர்களான கோவிந்தசாமி வேளாளர் மற்றும் இராஜப்ப வேளாளர் ஆகியோரின் வாரிசுகள் என்று கூறி பரம்பரை அறங்கவாலர் உரிமை கோர முடியாது. அதே போல்வது எதிர்மனுதாரர் 3வது கரையை சேர்ந்தவர்; அதற்கு தலைவர் கள்ளர் வகுப்பினரான தொண்டைமான்களே; 6வது எதிர்மனுதாரர் 2வது கரையை சேர்ந்தவர்; அதற்கு 7 தலை முதலியார் வகுப்பினரே. எனவே டி 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் செட்டில்மெண்ட்படி எவ்வித அறங்காவலர் உரிமம் பாத்தியதை கோர முடியாது. எனவே தாங்கள் மனுக் கோவிலுக்கு அறங்காவலராக வரமுடியாதபடி தடையாக உள்ள ஷ செட்டில்மெண்ட்டையே உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி மறுக்கின்றனர். அதே போல கிராமத்தில் வேளாளராக இருந்தாலும் மனுக் கோவில் அறங்காவலர் பதவிக்கு வரமுடியாத நபர்களான வழக்கறிஞர் ராமசாமி மற்றும் புருசோத்தமனும் செட்டில்மெண்ட்டை மறுக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

No of word : 150
No of correction : Nil

59

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1 ரூபாய் १ रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re COPY STAMP

மனுக்கோவில் பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர் நிர்வாகத்தில் உள்ள கோவிலா...

1. வெண்டாக்கோட்டை கிராமத்தில் பழங்காலந்தொட்டு நான்கு கரைகள் கொண்ட மக்கள் பிரிவினராக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு கரைக்கும் பரம்பரையாக ஒருவரை தலைவராக கொண்டு வாழ்ந்து வந்தனர். அதில் கிராமத்திற்கு முதலாவதாக வந்தவர்களும் அதிக மக்கள் தொகை கொண்டவர்களுமான வேளாளர் வகுப்பினர்கள் முதல் கரையாக இருந்த வந்தனர். மேலும் வேளாளர் வகுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்து வந்ததால் அவர்கள் இரு குழுவாக பிரிக்கப்பட்டு இரு தலைவர்கள் பரம்பரையாக இருந்து வந்தனர். செட்டியார் (சேனைத் தலைவர்) வகுப்பினர் தலைமையில் கண்ட செட்டியார் வகுப்பினரும் வேளாளரும் யாதவ கோணார் வகுப்பினரும் இரண்டாம் கரையாகவும்; கள்ளர் வகுப்பினரான நாயக்கர் மற்றும் தொண்டமான் பட்டப் பெயர்களைக் கொண்டவர்கள் கள்ளர் வகுப்பினரும், வேளாளரும் மூன்றாம் கரையாகவும்; மற்றும் முதலியார் வகுப்பினர் தலைமையில் கண்ட முதலியார் வகுப்பினரும் வேளாளரும் நான்காம் கரையாகவும் இருந்து வந்தனர்.

2. இதனை 19.08.11 தேதியிட்ட செட்டில்மெண்ட்டில் கண்ட வாசகங்களே நிரூபிக்கும். மேற்படி ஆவணம் நூற்றாண்டு பழமை வாய்ந்த ஆவணம். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு90-ன்படி 30ஆண்டுகள் பழமையான ஆவணங்களை Genuine டாகுமெண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும் கூறியுள்ளது. இதனை அனுசரித்து பல்வேறு உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் தீர்ப்புகளும் உள்ளது. மேலும் ஷ செட்டில்மெண்ட் ஆவணம் 19.08.11 முதல் நாளது தேதி வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு அரசு அதன் வருவாய் ஆவணங்களில் அந்த ஆவணத்தில் கண்ட தலைமைக்காரர்களைத் தான் நம்பகர்கள் என்று குறிப்பிட்டு பதிவு செய்து நடப்பில் வைத்துள்ளதுதையும்; இந்நீதிமன்ற O.A.79/72 & O.A.5/07 வழக்குகளில் இ.ச.அ.நி.துறை பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர்கள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நடப்பில்

No of word : 172

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Rc COPY STAMP

உள்ளதை ஏற்று ஆய்வு அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்பதையும் மற்றும் கிராம முனுசீப் சாட்சியம் அளித்துள்ளதையும் நீதிமன்றம் பரிசீலித்தாலே நன்கு தெரியும். மேலும் அதனை ரத்து செய்து எந்தவித சட்டப்பூர்வ நடவடிக்கையோ உத்தரவோ கிடையாது. எனவே அதன்படி ஓடி செட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர்களின் மனு நிவாரணத்தை வழங்க முக்கிய Genuine டாகுமெண்டாக எடுத்துக் கொள்ள பணிந்து வேண்டுகிறோம்.

3. மேலும் மேற்படி செட்டில்மெண்ட்டில் கண்டபடி உள்ள 23வகைறாக்கள் வகுப்பினர்கள் மட்டுமே நான்கு கரைதாரர்களாக வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு ஓ OA.79/72 & O.A.5/07 வழக்குகளில் கண்ட தரப்பினர்கள் சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் ஆய்வாளரின் அறிக்கைகள், கிராம முனுசீப் சாட்சியம் ஆகியனவே நன்கு நிருபிக்கும். மேலும் வழக்குகளில் கிராம மக்கள் என்று சாட்சிகளின் வாக்கு மூலங்கள் ஆய்வாளர்கள் அறிக்கைள் ஆகியவற்றில் குறிப்பிட்டு வருபவை மேற்படி செட்டில்மெண்ட்டில் உள்ள 23வகையறாவை சேர்ந்த வகுப்பினர்களை மட்டுமே குறிக்கும். இதனை அவ்வழக்குகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை அந்த உணர்வில் வைத்து படித்து ஆராயும் போது வழக்கின் பிரத்தியட்ச உண்மை நிலையை நன்கு உணரவும் அறியவும் முடியும். இதனை பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராம அப்போதைய வாக்காளர் பட்டியல்களும் நன்கு விளக்கும்.

4. மேற்படி நான்கு கரைதாரர்களால் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க கூடாது என்று பக்கம் 7-ல் பாரா VI-ல் கண்ட மனுக் கோவில் பற்றி என்ற தலைப்பில் கூறியுள்ளது போல அமைத்துக் கொண்டனர். காலப் போக்கில் மக்கள் எண்ணிக்கை கூடி மனுக் கோவில் நிர்வாகம் செய்வது குறித்து பிரச்சினை கிராம சபைக்கு வந்த போது கிராமத்தில் கண்ட நான்கு கரைதாரர்களும் ஒன்று சேர்ந்து பாரா VI-ன் தொடர்ச்சியான

No of word : 171
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

பக்கம்8-ல் மனுக் கோவில் நிர்வாக நடைமுறை என்ற தலைப்பில் கூறியுள்ளது போல அமைத்துக் கொண்டனர். இதற்கான ஆதாரமும் சாட்சியங்களும் வருமாறு-

5. மனுக் கோவில் இந்து சமய அறநிலையத் துறை சட்டம் வருவதற்கு முன்பே 200ஆண்டுகளுக்கு மேலிருந்து வருவதால் அதன் தொடக்கம் முதலிருந்தே ஒரு

நிர்வாக அமைப்பு இருந்து வந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாக நமக்கு இங்கு நன்கு விளங்கும். பின்பு மனுக் கோவிலுக்கு நிர்வாக சார்ந்த பிரச்சினைகள் வந்த போது அதற்கு கிராம மக்களான நான்கு கரைதாரர்களும் 23வகையறாக்களாக (தரப்பினர்களாக) மாறி ஒரு நிரந்தர நிர்வாக அமைப்புக்கான வழிமுறைகளை ஷ செட்டில்மெண்ட்டின்படி ஏற்படுத்திக் கொண்டனர். இந்த ஆவணத்தை O.A.79/72, O.A.5/07 மற்றும் தற்போதைய மேற்படி O.A.7/24 ஆகிய வழக்குகளில் கண்ட அனைத்து தரப்பினர்களும் ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் எதிர்மனுதாரர்கள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவண எண். 5208/1911 பத்தாண்டுகளுக்கு மட்டும் தான் அதாவது 1921வரைக்கு தான் செல்லக் கூடியாது; அதன் பிறகு அந்த செட்டில்மெண்ட் செல்லாது என்று அந்த பத்திரத்தின் வாசகங்களை தங்களுக்கு ஏற்றவாறு பொருள் கூறி வழக்கை வேண்டுமென்றே குழப்பி மறுக்கின்றனர்.

6. உண்மையில் ஷ செட்டில்மெண்ட் பத்தாண்டுகளுக்கு பிறகு மனுக் கோவிலுக்கு நிர்வாகிகளாக நியமிக்கப்பட்ட அப்பத்திரத்தில் கண்ட ஐந்து தலைமைக்காரர்களாவது அல்லது அவர்களது வாரிசுகளாவது தொடர்ந்து இருந்து அவர்கள் பிரியபடி நடந்து கொள்வது என்று தான் பத்திரம் பதிவு செய்யப்-பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு பிறகு தற்போது கடைப்பிடித்த வரும் நடைமுறை ரத்தாகி விடும் பிறகு புதிய முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எவ்விடத்திலும் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் நடைமுறையில் இல்லை என்றோ அல்லது காலவதியாகவோ

No of word : 167
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re. COPY STAMP

செல்வாநிலையோ அடைந்து விட்டதாகவோ கருதும் நபர்கள் அதற்கான முதல்நோக்கு (Prima Facie) ஆவணத்தை தாக்கல் செய்து நிருபித்துக் கொள்ள வேண்டும்; தவறினால் அதனை பொறுத்து விளம்புகை கோரி அசல் வழக்கு தொடுத்து தான் அவ்வாவணம் நடைமுறையில் இல்லை என்று நிருபித்து தீர்ப்பாணை பெற்று வரவேண்டும். அது மாதிரி எதிர்மனுதாரர்கள் எவ்வித அசல் வழக்கும் தொடரவில்லை. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் செட்டில்மெண்ட்டை எவ்விதத்திலும் ஆட்சேபித்து வாதம் செய்ய முடியாது. எனவே மேற்படி ஆவணப்படி அதில் கண்ட தலைமைக்காரர்கள் பரம்பரை வழி சார்ந்த நிர்வாக கட்டமைப்பில் தான் தற்போதும் அவர்களது வாரிசுகளான மனுதாரர்களின் நிர்வாக நடைமுறையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருத வேண்டும்.

7. மேற்படி O.A.5/07-ல் இந்நீதிமன்றம் முதலில் ஒரு உத்தரவினை வழங்கியிருந்தது. அந்த உத்தரவில் ஷெ செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட ஐந்து தலைமைக்காரர்களில் முதலாமானவரான கோவிந்தசாமி வேளாளரின் வாரிசு அம்மனுவில் கண்ட முதல் மனுதாரரான வழக்கறிஞர் ராமசாமி என்று கூறியிருப்பது தவறானது என்பதும்; அதே போல ஐந்து தலைமைக்காரர்களில் இரண்டாமவரான ராஜப்பா வேளாளரின் வாரிசு அம்மனுவில் கண்ட 2வது மனுதாரரான பழனிவேல் என்று கூறியிருப்பது தவறானது என்பதும்; அதில் கண்ட மற்ற 3, 4 & 5மனுதாரர்களை பொறுத்தவரை இம்மனுதாரர்களுக்கும் ஊர் மக்களுக்கும் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பது தான் எங்களது வழக்கு.

8.மேலும் O.A.5/07-ல் கண்ட 3, 4 & 5மனுதாரர்களிடம் 1 &2 மனுதாரர்களான முறையே வழக்கறிஞர் ராமசாமி மற்றும் பழனிவேலும், இறந்து போன கோவிந்தசாமி வேளாளர் மற்றும் ராஜப்பா வேளாளாளருக்கு தாங்கள் தான் வாரிசு என்று தவறான

No of word : 161
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய் १रुपया
1 Re.
COPY STAMP

தகவலை தெரிவித்து அவர்களை தங்களுடன் இணைத்து O.A.5/07-ஐ தாக்கல் செய்திருந்தனர். பின்னிட்டு ஷவழக்கினை முதல் மனுதாரரும் இறந்து போன 2வது மனுதாரரின் தகப்பனார் ராஜப்பா வேளாளரால் D.Dis.26613/2012/D2-ன்படி மேல்முறையீடு செய்யப்பட்டும் அதே போல மற்றும் சிலரால் மேல்முறையீடு செய்யப்பட்டும் அந்த மனு ரிமாண்ட் செய்து இந்நீதி- மன்றத்திற்கே விசாரணைக்கு வந்த போது அவ்வழக்கின் மனுதாரர்கள் வாரிசு குறித்து பொய்யான தகவல் தெரிவித்துள்ளமையால் வழக்கறிஞர் ராமவசாமி உள்ளிட்ட மனுதாரர்கள் ஆஜராகத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் O.A.5/07 வழக்கின் சங்கதிகளும் தீர்ப்பும் Core Subject-ஆன மனுக் கோவில் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ள கோவில் என்பது இன்றளவும் திண்ணமாக உள்ளது.

9. இடைப்பட்ட காலங்களில் பரம்பரை அறங்காவலர்களாக செயல்பட்டு வந்த மனுதாரர்களின் மூதாதையர்களுக்கும் மற்றும் மனுதாரர்களுக்கும் உதவியாக கிராம கமிட்டி அமைக்கப்பட்டதை சுட்டி காட்டி அதன் மூலம் மனுக் கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக செயல்படுவதிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டு விட்டதை போல உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி வரலாற்றை மறைத்து புதைத்து அதன் மூலம் ஆதாயம் அடைய பார்க்கின்றனர். இடையிடையே பொரளாதார தட்டுபாடு மற்றும் வறட்சிக் காரணமாகவும் மற்றும் கிராம மக்கள் திருவிழா குறித்து மாறுப்பட்ட கருத்துக்கள் தெரிவித்த போதும்; மேலும் மனுக் கோவிலுக்கு கும்பாபிசேகம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வரக்கூடிய சடங்குகளை செய்யவும் மனுதாரர்கள் மற்றும் அவர்களது மூதாதையர் காலத்தில் மனுக் கோவிலுக்கு பரம்பரை அறங்காவலாகளாக செயல்பட்டு வந்த நபர்களுக்கு உதவியாக அமைக்கப்பட்ட கிராம கமிட்டிகளை பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர்களை புறந்தள்ளி அமைக்கப்பட்டு தன்னிச்சையாக அமைக்கப்பட்ட கிராம கமிட்டி என்று சொல்லுவது தவறானது. அவ்வாறு பரம்பரை அறங்காவலாகளாக செயல்பட்டு வந்த நபர்களை நீக்கி உத்தரவு செய்து எவ்வித

No of word : 174
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய் १ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re. COPY STAMP

நீதிமன்ற உத்தரவோ இலக்கா உத்தரவோ கிடையாது. இன்று வரை மனுக் கோவிலின் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்களான மனுதாரர்கள் தரப்பில் தான் மனுக் கோவிலுக்கு மின்கட்டணம், நிலங்களுக்கு வாய்தா, குருக்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம், பூஜை புணஷ்காரங்கள் ஆகிய செலவுகளுக்கு பணம் செலுத்தி வருகின்றனர். அதற்கான ஆவணங்கள் இத்தடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும் மனுக் கோவிலுக்கு 1949–ல் பரம்பரை அறங்காவலர்களால் தான் கும்பாபிசேகம் நடத்தப்பட்டது.

10. மனு சொத்தான புலஎண்.111–ல் கண்ட நிலங்களின் கீழ்வாரம் மனுக் கோவிலுக்கு மனுதாரர்களின் மூதாதையர்களால் தானமளிக்கப்பட்டு அதன் காரணமாக இன்றளவும் அந்த நிலங்களின் வருவாய் ஆவணங்களில் நம்பகர்கள் என்று அறங்காவலரர்களாக இருந்த மனுதாரர்களின் மூததையர்கள் பெயர்களே அரசு வருவாய் துறையினரால் இன்றளவும் அங்கீகரிக்கப்பட்டு கண்டுள்ளது. இதனை நாம் ஷெ செட்டில்மெண்ட்டில் கண்ட ஐந்து தலைமைக்காரர்களின் வரிசைப்படி வருவாய் ஆவணங்களில் கண்ட ஐந்து பட்டாதாரர்களை ஆராய்ந்தால் முறையே செட்டில்மெண்ட்டின்படி முதலவதாக கண்ட கோவிந்தசாமி வேளாளர் இறந்து விட்டதால் வாரிசு முறையில் அவரின் பேரனும் இவ்வழக்கின் முதல் மனுதாரரின் கணவரான கோவிந்தசாமி வேளாளரின் தகபனார் தர்மராஜ் பெயர் இரண்டாவதாகவும்; இரண்டாவதாக கண்ட இராஜப்ப வேளாளர் பெயர் முதலிலும்; மூன்றவதாக கண்ட சொக்கலிங்க செட்டியின் பேரனும் இவ்வழக்கின் மூன்றாவது மனுதாரரின் தாத்தவுமான ராமசாமி செட்டியார் பெயர் மூன்றவதாகவும்; நான்காவதாக கண்ட கோவிந்த நாயக்கரின் பேரனும் இவ்வழக்கின் நான்காவது மனுதாரரின் தாத்தாவுமான அருணாசல தொண்டமான் பெயர் நான்காவதாகவும்; ஐந்தாவதாக கண்ட சிதம்பர முதலியாரின் பெயர் நான்காவதாகவும் அப்படியே இடம் பெற்றிருப்பதும்; இறந்த நம்பகர் கோவிந்தசாமி வேளாளருக்கு அவரது வாரிசான தர்மராஜை சேர்த்திருப்பதும் ஷெ செட்டில்மெண்ட் ஆவண எண்.5208/1911–ஐ வருவாய் துறையினர் அப்படியே நடைமுறைப்

No of word : 169
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Rc.
COPY STAMP

படுத்திருப்பதும் மனுக் கோவிலுக்கு அவர்கள் தான் உண்மையான பரம்பரை அறங்காவலர்கள் என்பதை ஏற்று செயல்பட்டிருப்பதையும் எவரும் மறுக்க முடியாத சான்றாக உள்ளது.

11. மேற்கண்ட ஆதாரப் பூர்வமான சங்கதிகளின் மேலான வாதுரைப்படி மனுக் கோவில் அது கட்டமைக்கப்பட்ட காலத்திலிருந்தே மனுவில் கண்ட நான்கு கரைதாரர்களின் பிரதிநிதிகளான பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர்களின் நிர்வாக கட்டமைப்பில் மனுக் கோவில் இருந்து வந்ததும்; பிறகு இடையில் 19.08.11 முதல் மனுக் கோவிலுக்கு நிர்வாகம் சம்மந்தமான எவ்வித பூசல்களும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடாது என்று எழுத்து மற்றும் ஆவணப் பூர்வமாக மேற்படி செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டு அவ்வாவணம் இன்றளவும் எவராலும் சட்டப்பூர்வமாகவோ தன்னிச்சையாகவே செயலிழக்காமல் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதும்; தற்போதுள்ள மனுதாரர்கள் அவர்களின் தொடர் வாரிசுகளாக தொடர்ச்சியாக மனுக் கோவிலுக்கு அறங்காவலர்களாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதும்; சமீபத்தில் முதல்கரையை சேர்ந்தவரும் மேற்படி செட்டில்மெண்ட்டில் கண்ட தர்மராஜ் வேளாளரின் வழி வந்த வாரிசுகளில் ஒருவருமான பழனிவேல் மகன் பிரபாகர் பெரும் நன்கொடையாளராக இருந்து மனுக் கோவிலுக்கு பல்வேறு நற்பணிகளுக்கு உதவி செய்தும் மற்றும் புதிய தேர் அமைத்துக் கொடுத்தும் அதன் மூலம் சிறப்பாக வெள்ளோட்டம் விட்டும் மனுதாரர்கள் தரப்பில் மற்றும் பல்வேறு கோவில் விழாக்களை சிறப்பாக நடத்தியும் வந்துள்ளது மனுதாரர்கள் நிர்வாகத்தில் தான் மனுக் கோவில் உள்ளதை நன்கு நிரூபிக்கும்.

12. மனுதாரர்கள் தான் மேற்படி செட்டில்மெண்ட்டில் கண்ட ஐந்து தலைமைக் காரர்களின் வாரிசுகள் என்பது O.A.79/72, O.A.5/07 மற்றும் தற்போதைய ஷ O.A.7/24 ஆகிய வழக்குகளில் கண்ட சாட்சியங்கள், ஆவணங்கள், வம்சாவழி பட்டியல் மற்றும் தர்மராஜ் இறப்பு மற்றும் வாரிசு சான்று 5 & 6எதிர்மனுதாரர்களின் எதிருரை ஆகியன நிருபிக்கும்.

No of word : 174
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய் १रुपया
1 Re.
COPY STAMP

13. வழக்கில் இலாக்கா தரப்பாக செயல்படும் முதல் எதிர்மனுதாரர் மற்ற எதிர்மனுதாரர்களோடு சேர்ந்து கொண்டு எதிர்தரப்பினரைப் போல வழக்கில் உண்மை நிலையை மறைத்து பாரபட்சமாக செயல்பட்டு வருகிறார். அவர் தனக்கு வழக்கு நோட்டீஸ் வந்தவுடனே 2 முதல் 6எதிர்மனுதாரர்களுக்கு தகவல் தந்து அவர்களை வழக்கில் கொண்டு வந்து மனுதாரர்களுக்கு எதிராக செயல்பட வைத்துள்ளார். தற்போதைய வெண்டாக் கோட்டை முன்னால் ஊராட்சி மன்ற தலைவரின் கணவரும்; முன்னால் ஊராட்சி மன்ற தலைவரும் மற்றும் முன்னால் அறங்காவலரான புருசோத்தமன், தக்கர்/செயல் அலுவலர்களை தன் கையில் போட்டுக் கொண்டு வழக்கில் தரப்பினராகாமலே ஒரு வழக்கறிஞரைப் போல எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதும் நீதிமன்ற மனு நடவடிக்கையில் ஈடுபட்டு பேசுவதும் ஆவணங்களை பெறுவதும் தருவதுமாக அதிகாரமற்ற வகையில் முதல் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் உதவியோடு செயல்பட்டு வந்ததை நீதிமன்றம் கவனத்தில் எடுத்து நீதி வழங்க மனுதாரர் பணிந்து வேண்டுகிறார்.

14. மேலும் புருசோத்தமன், முதல் எதிர்மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞரை கையில் போட்டுக் கொண்டு மனுதாரர்களின் மூதாதையர்களின் பெயரில் உள்ள மனுக் கோவிலின் பட்டாவை ரத்து செய்ய வருவாய் துறையினருக்கு மனுக் கொடுத்துள்ளார். மனுதாரர்களின் மூதாதையர்கள் நிலங்களின் பேரில் உள்ள மேல்வாரத்தை மட்டும் தானமளித்து அதில் வரும் மகசூலின் வருமானத்தை மனுக் கோவிலை பராமரிக்க செலவு செய்து பரம்பரையாக செயல்பட்டு வருகின்றனர். எனவே நிலத்தின் மேல்வாரம் மனுதாரர்களின் மூதாதையர்களிடம் உள்ளதாலும் மேலும் அவர்கள் அறங்காவலர்களாக இருந்து வந்ததாலும் மனுக் கோவில் பெயரோடு சேர்த்து அவர்கள் பெயரில் பட்டா கூட்டாக உள்ளது. எனவே மனுதாரர்களின் மூதாதையர்களின் பெயரில் உள்ள பட்டாவை

No of word : 163
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Rc
COPY STAMP

ரத்து செய்து விட்டால் மனுதாரர்கள் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்கள் உரிமையை அதன்படி ஆதாரமாக காட்டி கோர முடியாது என்று உள்நோக்கத்தோடு செயல்படுகின்றனர். மனுதாரர்களுக்கு கீழ்வாரம் உரிமை உள்ளதால் அறங்காவலர்கள் உரிமையே போனாலும் நிலத்தின் பட்டாவை அவர்களது பெயரிலிருந்து நீக்க முடியாது என்பது தான் உண்மை.

15. முந்தைய O.A.5/07 வழக்கில் கண்ட மேற்படி வழக்கறிஞர் இராமசாமி மற்றும் புருசோத்தமன் ஆகியோரின் சாட்சியங்களும் ஆவணங்களும் தங்களின் தற்போதைய கட்சிக்கு எதிராக உள்ளதாலும்; மேலும் அவ்வழக்கில் ஏற்பட்டுள்ள தீர்ப்பும் தங்களுக்கு எதிராக உள்ளதாலும்; தற்போது ஷ கோவிலின் பேரில் எவ்வித உரிமையும் புதிதாக கோர இயலாமல் இந்த வழக்கிற்கு நேர் விரோதமாக புதிதாக கட்சி எடுத்து வாதிட முடியாது என்பதாலும் தாங்கள் நேரடியாக செய்ய முடியாத விசயத்தை இராமசாமி & புருசோத்தமனும் எதிர்மனுதாரர்களை தூண்டிவிட்டு வழக்கு நடத்தி வருகின்றனர்.

இம்மனுவில் முதல் எதிர்மனுதாரரின் எதிருரைக்கு மனுதாரர்கள் தரப்பிலான பதில்–

1. முதல் எதிர்மனுதாரரின் எதிருரை பாரா3–ல் மனுக் கோவில் 200 ஆண்டுகளுக்கு முந்தைய கோயில் என்று தெரியாது என்று செயல்அலுவலர் கூறியுள்ளார்.

பதில்: (i). இந்த ஒரு காரணத்திற்காகவே அந்த செயல் அலவலர் மீது உண்மை சங்கதிகளை ஆவணங்களுக்கு எதிராக மற்ற தரப்பினர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் மறுத்து சங்கதியை மறைத்ததற்காக உரிய நடவடிக்கை எடுக்கலாம். மனுக் கோவில் நிர்வாக நடைமுறைகளை வகுத்து செயல்பட 1911–ஆண்டிலயே செட்டில்மெண்ட் ஆவண எண். 5208/1911 ஏற்படுத்தப்பட்டதை பற்றி தனது எதிருரை பாரா3–ல் குறிப்பிடுகிறார். இந்த ஆவணமே ஏற்பட்டு 114 ஆண்டுகள் கடந்து விட்டது.

(ii). மேலும் தனது எதிருரை பாரா5–ல் மனுக் கோவில் பற்றி O.A.5/07 வழக்கு

No of word : 169
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ருபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

இதே நீதிமன்றத்தில் நடந்தது குறித்து கூறுகிறார். அந்த வழக்கே 18ஆண்டுகள் கடந்து விட்டது. அந்த வழக்கில் செயல் அலுவலர் தரப்பினராக சேர்க்கப்பட்டு அவர் மூலம் பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை ஒ.மு.எண். இல்லை/2009 நாள்.05.01.2010 அறிக்கை பெறப்பட்டு அது இந்நீதிமன்ற சான்றாவணம்1 ஆக அவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மனுக் கோவில் வாசல் முன்பாக உள்ள தலவிருட்சமான குருதி வேங்கை மரமே 300ஆண்டுகள் பழமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதையெல்லாம் நன்கு தெரிந்தே முதல் எதிர்மனுதாரரான செயல் அலுவலர் மனுக் கோவில் 200 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில் என்பது எனக்கு தெரியாது என்று கூறியுள்ளார்.

(iii). மேலும் தனது எதிருரை பாரா1-ல் ROR-ன்படி புலஎண்.111 மனுக் கோவில் பெயரிலும் மற்றும் 6நபர்கள் பெயரிலும் உள்ளது என்று கூறும் முதல் எதிர்மனுதாருக்கு மனுக் கோவில் 200ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில் என்பது எப்படி தெரியாமல் போகும். ஏனென்றால் செயல் அலுவலருக்கு ROR நடைமுறை வந்தே நுறாண்டுகளுக்கு மேல் கடந்து விட்டது என்பது எப்படி தெரியாமல் இருக்கும்.

2. எதிருரை பாரா1-ல், தற்போதைய சிட்டாவில் மனுக் கோவில் மற்றும் 6நபர்கள் என்று கண்டுள்ள 6நபர்கள் எவ்வாறு கூட்டாக வந்தார்கள் என்பதற்கு விவரம் மற்றும் ஆவணம் இல்லை என்றும், மேலும் வேளாளர், செட்டியார், தொண்டமான், முதலியார் வகுப்பினர்களால் நிலங்கள் எழுதிக் கொடுக்கப்-பட்டுள்ளது என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும், ஆவணங்களும் இல்லை என்றும், மேற்படி நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு பூஜை, பூஜகர் ஊதியம் மற்றும் திருக்கோவில் பராமரிப்பு போன்ற வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பதற்கு விவரம் இல்லை என்றும் பச்சையாக பொய் கூறியுள்ளார்.

No of word : 167
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

பதில்:- (i). மனுக் கோவில் நிலத்தை பொறுத்து ROR, சிட்டா & பட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் நுறாண்டுகளுக்கு மேலே ஏற்படுத்தப்பட்ட அரசு ஆணங்கள். மேலும் முதல் எதிர்மனுதாரர் ஷ மனுவில் தாக்கல் செய்துள்ள சான்றிட்ட நகலான ROR உடன் கண்ட "அ"பதிவேட்டில் செட்டில்மெண்ட்டில் கண்டபடி நான்கு கரைதாரர்களில் உள்ள தலைமைக்காரர்கள் பெயர்கள் மட்டும் சரியாக பதிவு செய்யப்பட்டதிலிருந்தே அந்த நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டு அதனை ஒட்டி வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்பது நன்கு தெரியும்.

(ii). மேலும் 100ஆண்டுகளுக்கு முன்பே முதல் மனுதாரரின் மூதாதையரான வீரப்பெரமாள் மனுக் கோவிலுக்கு தங்களது பூர்வீக நிலமான புலஎண்.8-ல் கண்ட தரிசு நிலத்தை முழுஉரிமையுடன் கொடுத்து அதில் மனுக் கோவிலை கட்டியுள்ளனர். அதனால் புலஎண்.8 மனுக் கோவில் பெயரிலயே வருவாய் ஆவணங்கள் கண்டு வருகிறது.

(iii). ஆனால் புலஎண்.111-ல் கண்ட சாகுபடி நிலங்களின் மேல்வார உரிமையை மட்டும் மனுக் கோவிலுக்கு தானமளித்து அதனை குத்தகைக்கு விட்டு அதன் வருமானங்கள் முழுவதையும் மனு கோவிலுக்கு அளித்து வருகின்றனர். அதனால் தான் புலஎண்.111-ல் கண்ட நிலங்களின் வருவாய் கணக்குகள் மனுக் கோவில் மற்றும் மனுதாரர்களின் மூதாதையர்கள் பெயரில் கூட்டாக பல தலைமுறைகளாக காணப்படுகிறது. அப்போது ஆவணங்கள் இல்லாமல் நம்முடைய மனுக் கோவிலுக்கு தானே என்று ஆவணங்கள் இன்றி வாய்மொழியாக பகிரப்பட்டிருக்கும். அந்த காலங்களில் இப்போது உள்ள சட்டங்கள் எவையும் இல்லை. அந்த நிலையில் வாய்மொழி பகிர்வு அனுமதிக்கப்பட்ட ஒன்று.

(iv). இந்நிலையில் ஷெ நிலங்களுக்கு ஏற்பட்ட நுற்றாண்டுகளுக்கு மேலான வருவாய் கணக்குகளான ROR, சிட்டா, பட்டா, "அ"பதிவேடு மற்றும் தற்போது அதனை ஒட்டி ஏற்பட்ட ஆன்லைன் நிலஉரிமை விபரங்கள் உள்ளிட்ட வருவாய்

No of word : 173
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

ஆவணங்களின் உண்மை தன்மையை எவ்வித ஆதாரமுமின்றி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு90-க்கு எதிராக கேள்வியை மட்டும் எழுப்பி நீதிமன்றத்தை திசை திருப்புவது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்றாகும்.

(v).முப்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆவணங்களின் உண்மை தன்மையை சந்தேகித்தால் எதிர்மனுதாரர்கள் தான் அதற்கு முதல்நோக்கு ஆதாரங்களை கொடுத்து அதன் பின்தான் அதனை குறித்து கேள்வி எழுப்ப முடியும். எதிர்மனுதாரர்கள் அவ்வாறில்லாமல் ஆதாரமின்றி பொத்தாம் பொதுவாக கேள்வி எழுப்புவது சட்டப்படி ஏற்க தக்கதல்ல: மேலும் அவ்வாறு செய்வது நீதிமன்ற நேரத்தை வீணடித்து தவறான பாதையில் கொண்டு செலவதாகும்; இதனை ஒரு செயல் அலவலர் செய்யக் கூடாத செயலாகும்.

(vi). மேற்படி நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு மனுக் கோவில் பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு விவரம் இல்லை என்று முதல் எதிர்மனுதாரரான செயல் அலுவலர் நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் மனுக் கோவில் ஆவணங்கள் ஆகியவற்றுக்கு எதிராக கூறும் அவரது செயல் பணிக் குறைபாட்டுடன் துணிச்சலாக கூறும் பொய்யான கூற்றாகும். இன்றையை தேதி வரை மனுதாரர்கள் தரப்பில் தான் பூஜை, பூஜகர் ஊதியம் மற்றும் திருக்கோவில் பராமரிப்பு போன்ற வேலைகளுக்காக ஷ நிலங்களின் வருமானங்களை வைத்து செலவு செய்து வருகின்றனர். இதனை O.A.5/07 வழக்கில் கண்ட ஆய்வாளர் அறிக்கை மற்றும் சாட்சிகள் தெளிவாக கூறியுள்ளனர்.

(vii). மேலும் O.A.79/72 வழக்கில் கண்ட ஆய்வாளர் அறிக்கை பாரா3-ல் வருட வருமானம் நெல் கலம்60 என்றும் அதில் குருக்கள் சம்பளமாக 40கலம் என்றும் மீதியை விற்று கிஸ்தி இதர செலவுகள் செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. மேலும் அதில் கண்ட சாட்சிகளும் இதனையே ஏற்று கூறியுள்ளனர். இவைகளை தற்போதைய செயல்

No of word : 169
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய் १रूपया
COPY STAMP

அலுவலரான முதல் எதிர்மனுதாரர் எவ்வாறு அறியாமல் இருக்க முடியும்; அவரது பணியே வழக்கு சங்கதிகளை சேகரித்து அதனை பாரபட்சமற்று இந்நீதிமன்றத்தில் தெரிவித்து இந்நீதிமன்றம் அதன் பேரில் தீர்வு சொல்ல உதவுவது தானே; அதனை செய்யாமல் தவறியுள்ளது மட்டுமல்லாமல் உண்மைக்கு மாறான சங்கதிகளை வேண்டுமென்றே இம்மனுவுக்கு எதிராக மனுதாரர்கள் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்றும் மற்ற எதிர்மனுமதாரர்களுக்கு ஆதரவாக ஏதோ ஆதாய நோக்குடன் கூறப்பட்டதாகவே தெரிகிறது.

3. முதல் எதிர்மனுதாரரின் எதிருரை பாரா4–ல் ஷை செட்டில்மெண்ட்டில் பத்து வருடத்திற்கு ஐந்து தலைமைக்காரர்களுக்கு பாத்தியத்தை கொடுத்திருப்பதால் அதற்கு மேல் இதில் கண்டவர்களும், அவர்களின் வாரிசுகளும் மேலே கண்ட ஐந்து பேர்களையாவது அல்லது அவர்களின் வாரிசுதாரர்களிலிருந்து நடத்தும் விசயத்தை அவர் அவர்கள் பிரியப்படி நடந்து கொள்வது என பத்திரத்தில் கண்டுள்ளது என்றும்; ஷை ஆவணம் நபர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது இலக்காவை கட்டுப்படுத்தாது என்றும் தவறான பொருள் உணரும்படி கூறியுள்ளனர்.

பதில்:– (I). மேற்படி செட்டில்மெண்ட்டில் பத்து வருடத்திற்கு ஐந்து தலைமைக்காரர்களுக்கு இருப்பது என்றும் அதற்கு மேல் அதில் கண்டவர்களும், அவர்களின் வாரிசுகளும் (23வகையறா) மேலே கண்ட ஐந்து பேர்களையாவது அல்லது அவர்களின் வாரிசுதாரர்களை வைத்து நிர்வாகத்தை நடத்தும் விசயத்தை அவர்கள் பிரியப்படி விட்டு விடுவது என்ற பொருள்படித் தான் டி செட்டில்மெண்டடில் கண்டு அதுப்படி நாளது தேதிவரை மனுக் கோவில் நிர்வாகம் நடந்து வருகிறது. மனுக் கோவிலுக்கு இலாக்காவினர் பரம்பரைவழி சாராத அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட போதெல்லாம் அதனை ஆட்சேபித்து மனுக் கொடுத்து அவர்களும் மனுக் கோவில் நிர்வாகத்தை எடுத்து நடத்த முடியாமல் சும்மாவே இருந்து போயி உள்ளனர். எனவே

No of word : 165
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

நடப்பில் மேற்படி செட்டில்மெண்டில் கண்டபடி ஐந்து தலைமைக்காரர்கள் வாரிசுகள் தான் தற்போது வரை மனுக் கோவிலை நிர்வாகம் பார்த்து வருகின்றனர்.

(ii). மனுக் கோவில் 200ஆண்டுகளுக்கு முன்பு முதல் மனுதாரரின் மூதாதையரான வீரப்பெருமாள் என்பவரால் இடமும் பொருதவியும் கொடுத்து தொடங்கப்பட்டு பின்னிட்டு நான்கு கரைதாரர்களில் உள்ள பெரும் தனக்–காரர்களான அந்தந்த பரம்பரை கரைத் தலைவர்களால் மொத்த கரைதாரர்களின் மக்களின் பொது நன்மைக்காகவும் வளர்த்து எடுத்து வந்து தங்களுக்குள் ஒரு வாய்மொழி உடன்பாட்டின்படி நிர்வகித்து வந்தனர். பின்னிட்டு இலக்கா சட்டம் வருவதற்கு முன்பே மனுக் கோவில் நிர்வாகத்திற்கு ஒரு எழுத்துமூல ஏற்பாடு வேண்டுமென்று 1911–ல் ஷ செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டது. அதனை தற்போது சில தனிநபர்களால் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் இலக்காவை கட்டுப்படுத்தாது என்று செயல் அலுவலர் கூறுவது TN H.R. & C.E சட்டம் பிரிவு6(11)–க்கு எதிரானது; அவ்வாறு சொல்ல அவர் ஷெ சட்டப் பிரிவால் தடைப்பட்டுள்ளார். மேலும் ஒரு கோவில் தனியார் கோவிலா அல்லது பொதுக் கோவிலா என்று முடிவு செய்யும் ஆள்வரை வரம்பு சிவில் நீதிமன்றங்களுக்கே உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. பார்க்க:1992(2) MLJ பக்கம்530–ல் உள்ளது. அதுபோல எவரும் மனுக் கோவில், பொதுக் கோவில் என்று தீர்ப்பாணை பெற்று வரவில்லை.

4. முதல் எதிர்மனுதாரரின் எதிருரை பாரா5–ல் கூறியபடி மனுதாரர்கள் மனு கோவில் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து செயல்படவில்லை என்றும்; முதல் மற்றும் 2வது மனுதாரர்கள் செட்டில்மெண்ட்டில் கண்ட தலைமைக்காராகள் இல்லை என்றும்; ஏற்கனவே O.A.5/07 வழக்கு தாக்ல் செய்து தள்ளுபடியாகி விட்டது என்றும் முதல் எதிர்மனுதாரர் கூறுவது தவறானது.

No of word : 165
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

பதில்:- (i). O.A.5/07-ஐ தாக்கல் செய்ததே 2முதல் 6எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க தூண்டிவிட்ட நபர்களான வழக்கறிஞர் ராமசாமி வகையறா மற்றும் புருசோத்தமனை சேர்ந்தவர்களும் தான். இம்மனுவில் கண்ட 1 & 2மனுதாரர்களை சேர்க்காமல் போடப்பட்ட ஷெ வழக்கு மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. மேலும் அவ்வழக்கு மெரிட்டில் இறுதி தீர்வாகாமல் எக்ஸ்பார்டில் தீர்ப்பாகியுள்ளதாலும் எவரையும் கட்டுப்படுத்தாது. சிபிசி பிரிவு 11-ன்படி இரு வழக்குகளிலும் உள்ள தரப்பினர்கள் ஒரே நபர்களாகவும் அந்த வழக்கு இறுதியாகவும் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். மனு கோவிலுக்காக செட்டில்மெண்ட்படி ஏற்படுத்தப்பட்ட நிர்வாக கட்டமைப்பை கட்டுப்படுத்தும் வகையில் அதில் கண்ட ஐந்து தலைமைக்காரர்களின் வாரிசுகளான மனுதாரர்கள் அனைவரையும் சேர்ந்து O.A.79/72 & O.A.5/07வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை.

(ii). மேலும் O.A.79/72-ல் முதல் மனுதாரரின் மூதாதையர் தர்மராஜ் என்பவரால் தனிப்பட்ட முறையில் தான் குடும்பத்திற்கு மட்டுமே சொந்தமான கோவில் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். எனவே O.A.79/72 & O.A.5/07 வழக்குகள் செட்டில்மெண்ட்டின்படி ஏற்படுத்தப்பட்ட ஐந்து தலைமைக்காரர்களின் நிர்வாக கட்டமைப்பை சேர்ந்த தற்போதைய வாரிசுகளான மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. இதனையே "O.A.79/72 வழக்கின் தீர்ப்பில் Ex.B.1 (RSR) & Ex.B.2 (செட்டில்மெண்ட்) ஆகியவை முக்கிய (Vital Documents) ஆவணங்கள் என்றும்; அவைகள் எந்த காலத்திலும்(மனுதாரர் சொல்வது போல) தனி ஒரு நபர் அறங்காவலர் நிர்வாகத்தில் இருந்ததில்லை என்றும்; எப்போதுமே கிராமத்தில் கண்ட அனைத்து வகுப்பினராலும் அதாவது Ex.B.2-ல் கண்ட 4கரைதாரர்களிடமிருந்து தேர்தெடுக்கப்பட்ட ஐந்து தலைமைக்காரர்களாலும் அவர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர் அறங்காவர்கள் குழுவால் தான் மனு கோவில் நிர்வாகம்

No of word : 161

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

பார்த்து வரப்பட்டுள்ளது என்று நான் எவ்வித தயக்கமுமின்றி இம்முடிவுக்கு வருகிறேன் என்று தெளிவுப்பட இணை ஆணையர் O.A.79/72-ல் கூறியுள்ளார். எனவே O.A.79/72 & O.A.5/07 இரு வழக்குகளுமே மனுக் கோவில் நிர்வாகம் செட்டில்மெண்ட்படி ஏற்படுத்தப்பட்ட பரம்பரைவழி சார்ந்த ஐந்து தலைமைக்காரர்களிடமும் அவர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடம் (Ex.B.1-ல் கண்டபடி) உள்ளது என்று தெளிவாக O.A.79/72- 5. O.A.79/72 & O.A.5/07 இரு வழக்குகளினால் இவ்வழக்கு முன்தடையால் (Resjudicatta) பாதிக்கப்படவுமில்லை.

(iii). மேலும் O.A.5/07 வழக்கில் இறுதி தீர்வு எதுவும் ஏற்படாமல் எக்ஸ்பார்டியாக தள்ளுபடியானது. எனவே O.A.5/07 வழக்கின் எக்ஸ்பார்டி தீர்ப்பு மனுதாரர்களை கட்டுப்படுத்தாது; மேலும் எதிர்மனுதாரர்கள் சொல்வது போல சிபிசி பிரிவு11-ன்படி வழக்கு முன்தடையால் (Resjudicatta) பாதிக்கப்படவும் 2. ( A.K.Parvathambal Vs Dy. Commissioner, H.R & C.E சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புபடி ஒரு வழக்கில் சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரையும் சேர்த்து கட்டுப்படுத்தும்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பொது அறிவிப்பு செய்யவில்லை என்றால் அவ்வழக்குக்கு வழக்கு முன்தடை கோட்பாடு பொறுந்தாது என்று கூறியுள்ளதன்படி இம்மனுவுக்கு முன்தடை (Resjudicatta) பொறுந்தாது.

எனவே சட்டப்படியும் சாட்சியங்களின்படியும் பொருண்மைகளின்படியும் நன்கு நிருபிக்கப்பட்டுள்ள மனுதாரர்களின் மனுவை ஏற்று மனுக் கோவில் பரம்பரை வழி சார்ந்த அறங்காவலர்களான மனுதாரர்கள் நிர்வாகத்தில் கண்ட மனுக் கோவில் என்கிறபடியால் மனுதாரர்களை மனுக் கோவில் பரம்பரைவழி சார்ந்த அறங்காவலர்கள் என அங்கீகரித்து விளம்புகை செய்து உத்தரவிட மனுதாரர்கள் தரப்பில் பணிந்து வேண்டப்படுகிறது.

No of word : 152
No of correction : Nil

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1ரூபாய் १रूपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

| | |
|---|---|
| 1. | எழுத்துமூல வாதுரை |
| 2. | எழுத்துமூல வாதுரை (Neat Copy), 19.08.1911 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் (Script Copy) |
| 3. | செட்டில்மெண்ட் பத்திரம் தெளிவான தட்டச்சு நகல் |
| 4. | மனு கோவில் நில உரிமை விபரம் ஆன்லைன் நகல் |
| 5. | மனு கோவில் நிலத்திற்கு பொண்ணாவராயன் கோட்டை கி.நி.அ. சான்று |
| 6. | மனு கோவில் நிலத்திற்கு பொண்ணாவராயன் கோட்டை கி.நி.அ. 1432பசலி அடங்கல் சான்று |
| 7. | O.A. 79/1972 |
| 8. | ஆட்சேபனைதாரர்கள் எதிருரை (R.V.சிதம்பர வேளாளர் & பலர்) |
| 9. | பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை & வாக்குமூலங்கள் |
| 10. | O.A. 79/1972-ல் கண்ட உத்தரவு |
| 11. | O.A. 5/2007 மனு, பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை & வாக்குமூலங்கள் |
| 12. | மனுதாரர் தரப்பு எழுத்துமூல வாதுரை (ராமசாமி வேளாளர் & பலர்) |
| 13. | இரா.சிவக்குமார் வேளாளர் RTI மனுவின் பேரிலான பெற்ற தகவல்கள் |
| 14. | O.A. 5/2007-ல் கண்ட உத்தரவு |
| 15. | A.P.14-2012 D2-ல் கண்ட உத்தரவு |

2 முதல் 4-ம் எதிர்மனுதாரர்கள் சார்பாக கீழ்காணுமாறு எழுத்து மூல வாக்குமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. This respondent denies all the allegations that are made in the petition, except those that are expressly admitted herein and the petitioner are put to strict proof of the same. The averments

No of word : 150
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP
ایک روپیہ

found in the petition are false frivolous and untenable. This respondent submits that this application is devoid of merits and is liable to be dismissed in limini.

2. The petitioners have filed this original application under Section 63(b) of the Hindu Religious and Charitable Endowments Act of 1959. This respondent admits that the first and second petitioner belong to Velalar community, the third petitioner belong to Chettiyar community, the fourth petitioner belong to Kallar Thondaimar community and the fifth petitioner belong to Mudhaliyar community. The temple has been from time in memorial managed and administered by the majority Velalar community and they have also included Yathava Konar, Chettiyar, Kallar, and Mudhaliyar community families residing in Vendakkottai village. They have permitted devotees from Vendakkottai village and from neighbouring villages to worship the deities in the temple. They all can offer special poojas, Archanai and Abishegam. There are no specific ingredients stated by the petitioners to claim relief under Section-63(b) of the HR & CE Act.

No of word : 164
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP
1 Re.

3. The present first petitioner Mrs.G.Veerasundari wife of D.Govindaswami had filed this application under Section-63(b) of the HR & CE Act. Her father-in-law P.Dharmaraja Velalar son of Perumal had filed similar application, to declare him a hereditary trustee of the Institution under Section-63(b) of the HR&CE Act. R.V.Chidambara Velalar so of Veerasami and others were cited as respondents in this OA No:79 of 1972.

4. The second Petitioner R.Nadanasabapathy is son of D.Rajappa Velalar. His father D.Rajappa Velalar son of Dharmaraj Velalar - RW 1 was examined as the first witness on the respondents side in OA No:79 of 1972. The above said D.Rajappa Velalar was also appointed as Non-hereditary trustees by the Hindu Religious and Charitable Endowments Department in its proceedings G.O.No.155 dated 28/05/1998, this respondents further submits that Non-hereditary trustees were appointed by thus department order dated 10/06/1994, 01/12/1994, 13/07/2005 and 03/10/2005. The temple was also continuously administered by the Hindu Religious and Charitable Endowments Department through Non-hereditary trustees for the past more than five

No of word : 165
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்  १ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

decades the temple was taken over by the Hindu Religious and Charitable Endowments Department in the year 1971-1972 and appointed the non-hereditary trustees. From 2008 onwards the Village committee consisting of 19 members were formed to administer and manage this A/M Subramaniyaswami Temple, A/M Ayyanar Temple, A/M Maariyamman Temple, A/M Kaaliamman Temple and A/M Muniyan Temple situate in Vendakkottai village. This committee was actively administering till 2012. The Fit person/Executive officer was managing and administering this Institution till 2023. In 2023 non-hereditary trustees were appointed to administer this Institution. The said non-hereditary trustees consisting of 3 members are managing and administering this Institution till date. Hence it is clear that the temple was managed and administered by the Hindu Religious and Charitable Endowments Department appointed non-hereditary trustees for the past more than 4 decades. In the year 1911 a Registered Settlement Deed registered as Document No: 5208 of 1911 dated 19/08/1911 on the file of the Joint II Sub-Registrar, Pattukkottai was

No of word : 161
No of correction : Nil

ONE RUPEE
1ரூபாய் १रुपया
COPY STAMP

executed by 23 members / residents of the village nominating five persons with Tacit consent to manage and administer this Institution. This registered Settlement Deed further reveals that this Settlement Deed was executed for a specific period of ten years only. This clauses in the Settlement Deed, if necessary, would be extended for further period with the consent of the above mentioned 23 persons / their legal heirs. This Clauses in the Settlement Deed clearly mentions that this settlement deed would be in force for a period of ten years. This Respondents submits that there is no record to substantiate whether this Settlement Deed was extended for a further period from the year 1921. This Respondents further submits, to their knowledge, the temple was locked and was without pooja and neivedyam to the deities for more than 30 years.

5. The villagers later felt that it was not good for the village residents to keep the Temple locked without pooja and neivedyam for more than three decades; Therefore, they decided to form

No of word : 172
No of correction : Nil

ONE RUPEE

1 ரூபாய் १ रुपया

GOVERNMENT OF TAMILNADU

TRUTH ALONE TRIUMPHS

COPY STAMP

1 Re.

ایک روپیہ

an Ad hoc Temporary committee to conduct the 10 days festival. This temporary Ad hoc committee was conducting the 10 days festival peacefully till 1971. In 1971-1972, the Hindu Religious and Charitable Endowments Department appointed non-hereditary trustees from the village. Even after the appointment of non-hereditary trustees in the year 1971-1972, the ten days auspicious festival was not conducted due to difference of opinion in the villagers and also due to misinterpretation of the clauses in the 1911 Settlement deed. This Respondents further submits that the HR & CE department from the year 1973-1978, appointed a five-member non-hereditary trustees to administer the temple. This appointment of five member non-hereditary trustees by the HR & CE department continued till 2008. From there onwards till 2023, the Fit person / Executive officer was appointed for managing and administering the temple. On 16/05/2008, a Kumbabishegam was performed in a grand manner by the five member non-hereditary trustees appointed by the department and by the Thirupanikuzhu consisting of villagers.

No of word : 165
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP

6. The third petitioner in this OA No; 7 of 2024, E.Sivaguru Chettiyar son Elangovan Chettiyar. The third petitioner E.Sivaguru Chettiyar's peternal grandfather is C.Ramaswami Chettiryar son of Chokkalingam Chettiyar. This above said Chokkalingam Chettiyar had two sons mainly C.Ramaswami Cheetiyar (the 3rd petitioners grandfather) and C.Arunmugam Chettiyar. This said C.Arunmugam Chettiyar was a witness in OA No: 79/1972, the said C.Arunmugam Chettiyar was examined as 4th witness in the respondents side (RW4).

7. The fifth petitioner in this OA No. 7 of 2024, R.Rajendran Thondaimar son of A.Ramalinga Thondaimar, is the Grandson of D.Arunachala Thondaimar, the said D.Arunchala Thondaimar was examined as PW2 in OA No: 79 of 1972. He had deposed that the temple is a public temple belonging to the villagers. He has further stated in his deposition that the renovations of the temple has been done only through the contribution of the villagers and he has denied the existence of the 1911 Settlement Deed after the year 1921.

No of word : 162
No of correction : Nil

ONE RUPEE
1 ரூபாய்
१ रुपया
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
COPY STAMP
1 Re.

8. These Respondents humbly submits that in the circumstances stated above these present petitioners as legal heirs of the parties in the OA No: 79 of 1972 which was dismissed on merits on 31/12/1974, have filed this OA No:7 of 2024, under Section-63(b) of the HR & CE act. The petitioner P.Dharmaraj Velaiar had not preferred any appeal against the order passed by the Deputy Commissioner Hindu Religious and Charitable Endowments (Admn) Department, Thanjavur in OA No: 79 of 1972 which was dismissed on merits on 31/12/1974. 9. Thess respondent submits that another OA No: 05 of 2007 under Setionc-63(b) of Hindu Religious and Charitable Endowments Act. was filed before the Joint Commissioner Hindu Religious and Charitable Endowments (Admn) Thanjavur on 05/04/2007. In this OA No:05of 2007 the third Petitioner was R.Perunthagai Elango son of Ramaswami Chettiyar,. The fourth Petitioner in OA No:07 of 2024, E.Sivaguru Chettiyar is the son of the above said R.Perunthagai Elango. The fourth Petitioner in OA No: 5 of

No of word : 164
No of correction : Nil

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1 ரூபாய்

१ रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re

COPY STAMP

2007. R.Rajendra Thondaimar son of Ramalinga Thondaimar is the fifth Petitioner in this present OA No: 7 of 2024. His Paternal grandfather P.Arunachala Thondaimar son of Pothaiyappa Thondaimar was PW2 in OA No:79 of 1972. The above said AP.runachala Thondaimar, PW2 in OA No:79 of 1972 has deposed that the Temple is a public temple, belonging to the villagers. This sixth Petitioner in OA No: 7 of 2024 is R.Thiruthanivel son of Rangaswami Mudhaliyar. The above said C.Rangaswami Mudhaliyar son of Chidhambaram Mudhaliyar was the fifth Petitioner in OA No: 5 of 2007.

These Petitioners have file three OA's for the same temple under the same provision, with the same Prayer before this same Hon'ble Court which is not maintainable. Therefore, this O A No: 7 of 2024 suffers RES JUDICATA and is liable to be dismissed in limini. These petitioners have not averred any fresh reasons or any change of circumstances to file this present original application under section 63(b) of the HR & CE act. The Petitioners have not stated any valid

No of word : 174

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய்
१रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

or acceptable reasons as to why this fresh application was filed seeking the same relief before this Hon'ble court under section 63(b) of the act. Also, the petitioners have not let in any evidence or filed any documents substantiating their reasons for claiming relief under 63(b) of the act. These 2 to 4 respondents further submits that these respondents and their counsels were present on all the hearing dates. Unfortunately, this Hon'ble court did not permit to cross examine PW1 and PW2 on behalf of these respondents 2 to 4. Also, this Hon'ble court has not permitted these respondents to prove their case by letting evidence on their side and also to mark the documents as exhibits on their side. These 2 to 4 respondents filed reopen and recall applications on 16.04.2025 through registered post with acknowledgement due and it was received by this Hon'ble court. But till date no order has been passed by this Hon'ble court in the reopen and recall application. This respondent

No of word : 166
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய் १ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re. COPY STAMP

humbly submits that no opportunity was given to these 2 to 4 respondents by this Hon'ble court to prove their case.

10. These respondents submit that the Petitioners are at liberty to prefer appeal before the Commissioner, Hindu Religious and Charitable Endowments Department, Chennai, if the Petitioners are aggrieved by the order of the Commissioner, then they can prefer the Civil Suit may within ninety days from the date of decree may prefer in the present case OA No:79 of 1972 was dismissed on merits by the Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn) Department, Thanjavur on 30/12/1974. The Petitioners in OA No: 79 of 1972 have not preferred any appeal. Instead of preferring an appeal, after a lapse of 33 years, some of their legal heirs along with others had filed another OA No: 5 of 2007, under Section-63(b) of Hindu Religious and Charitable Endowments Act, on 05/04/2007. The Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments Department 06/02/2011, allowed this OA No:5 of 2007 filed under

No of word : 168
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

Section-63(b) of Hindu Religious and Charitable Endowments Act, on merits. The legal heirs of the respondents in OA No: 79 of 1972 had preferred an appeal to the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn) Department, against the order passed by the Deputy Commissioner Hindu Religious and Charitable Endowments (Admn) Department, Thanjavur in OA No: 5 of 2007 dated 08/02/2011 by filing a party impleading petition. The Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn) Department, Chennai in this AP No: 14 of 2012 passed an order setting aside the order in OA No: 5 of 2007 dated 08/02/2011 and remanded the matter for fresh enquiry, directing the Joint Commissioner, HR & CE, Thanjavur after giving an opportunity to the appellants, within a time frame of three months by the commissioner's order on 23/11/2012. The Joint Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn) Department, Thanjavur on 05/01/2017 dismissed the OA No: 5 of 2007 for default that DFD order in OA No: 5 of 2007 dated 05/01/2017 was not restored till date.

No of word : 171
No of correction : Nil

115

ONE RUPEE

1ரூபாய் १रुपया

GOVERNMENT OF TAMIL NADU

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

11. The Petitioner's in the present OA No:07/2024 have not averred any specific explanation for preferring Application thrice under Sec–63(b) of the Hindu Religious and Charitable Endowments Act in OA No: 79 of 1972, 5 of 2007 and 7 of 2024. Therefore, this application is devoid of merits and is liable to be dismissed in limini as it is not maintainable under law. All these three applications were filed under Section –63(b) of the Hindu Religious and Charitable Endowments Act.

Section–63(b) of the HR & CE act defines as follows,

Subject to the rights of suit or appeal herein after provided, the Deputy Commissioner shall have power to inquire into and decide the following disputes and matters

(a) .........

(b) Whether a trustee holds or held office as hereditary trustee

In other words, the Deputy Commissioner can only decide to the status of the office of the trustees, viz., whether it is hereditary, The Deputy Commissioner is not competent to go into the

No of word : 163
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP
ایک روپیہ

further question as to which of the competent claimants is a hereditary trustee or whether both or joint hereditary trustees. This respondent submits that, that is a matter not covered by Section-63(b) of the Hindu Religious and Charitable Endowments Act. and has to be decided only by a separate suit. The present petitioners are neither decedents of the founder's family nor their ancestors from time immemorial in continuous succession have been managing and administering the temple without break. This institution in question have been managed and administered by the non-hereditary trustees appointed by the Hindu Religious and Charitable Endowments Department for the past four decades. In these circumstances also, the petitioners are not entitled for relief under Section-63(b) of the Hindu Religious and Charitable Endowments Act. viewing from any angle, the present petitioners are not entitled to claim under Section-63(b) of the Hindu Religious and Charitable Endowmen Act. Therefore, we request that this original application filed by these petitioners under Section 63(b) of the Hindu Religious and Charitable Endowments Act be dismissed.

No of word : 172
No of correction : Nil

ONE RUPEE
1 ரூபாய்
१ रुपया
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

5 மற்றும் 6-ம் எதிர்மனுதாரர்கள் சார்பாக கீழ்காணுமாறு எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இந்த மனுதாரர்களின் முன்னோர்கள் ஏற்கனவே அசல் மனு எண். 79/1972, அசல் மனு எண். 5/2007 மற்றும் மேல் முறையீடு மனு எண். 14/2012 ஆகிய வழக்குகளை இதே தாவா கோயிலுக்காக இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 63(b) பிரிவின் கீழ் தாக்கல் செய்து மனுதாரர்கள் அப்பரிகாரம் பெற அருகதை இல்லாதவர்கள் என்ற காரணத்தினால் அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இம்மனுதாரர்கள் ஒரே தாவா கோயிலுக்காக ஒரே சட்ட பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தில் மூன்று முறை மனு தாக்கல் செய்துள்ளனர். அவ்வாறு சட்டவிரோதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

2. மனுதாரர்கள் வழக்கறிஞர் திரு.K.வைத்திலிங்கம் மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவானது O A no: 5/2007 எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்த O A no: 5 / 2007 என்ற வழக்கானது இந்த நீதிமன்றத்தில் 05.04.2002 அன்று தாக்கல் செய்யப்பட்டு 08.02.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்காகும். அந்த வழக்கு மீண்டும் 05.01.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இந்த மனுதாரர்கள் அதன்மீது மேல்முறையீடு செய்யாமல் மீண்டும் O A no: 7/2024 என்ற எண்ணில் மீண்டும் இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 63(b) பிரிவின் கீழ் பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர். அந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத் தக்கதல்ல. மேலும் இக்கோப்பில் O A no: 7 / 2024 என்ற வழக்கிற்கான அசல் மூல மனுவானது

No of word : 168
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

இந்நீதிமன்ற கோப்பில் இல்லை. 2 முதல் 6 மனுதாரர்கள் தங்களை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்க கோரி மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவானது இடைநிலை மனு எண் 31/2024 மற்றும் 32/2024 என்ற மனுக்களில் இந்த நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு பின்னர் 2 முதல் 6 மனுதாரர்களை தரப்பினராக சேர்க்கும் மனுவில்
அசல் மனு எண் 5/2007 என்ற எண்ணானது மனுதாரர்களால் O A no: 7 / 2024 என்று குறிப்பிடப்பட்டு திருத்தப்பட்ட மனு தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு O A no: 7 / 2024 என்ற எண்ணில் மனுதாரர்களால் எந்த மனுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டதாக கூறி அதற்கு ஒரு திருத்தப்பட்ட மனு (Amended Petition Copy) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது. இந்நீதிமன்றத்தின் கவனத்தை திசை திருப்பி ஏமாற்றி ஒரு உத்தரவினை பெற சட்ட விரோதமாக மனுதாரர்கள் முயற்சித்துள்ளனர். அவ்வாறு O A no: 7 / 2024 என்ற எண்ணில் எந்த மனுவும் மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவே இல்லை.

3. இந்த வழக்கு விசாரணைக்கு வரும் ஒவ்வொரு வாய்தா தேதிகளிலும் இந்த 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்களும் எங்களுடைய வழக்கறிஞர்களும் தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளோம். எங்களுக்கு, மனுதாரர் தரப்பு இரண்டு சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. நீதிமன்றத்தின் இந்த செய்கையானது சட்டப்படி பாரபட்சமாகும். இது சம்பந்தமாக இந்த வழக்கினை மறு திறப்பு செய்து மீண்டும் மறுவிசாரணை செய்ய கோரி இந்த எதிர் மனுதாரர்கள் கடந்த 16.04.2025 அன்று பதிவு தபால் ஒப்புகை சீட்டு மூலமாக

No of word : 170
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

ஒரு மனுவினை தாக்கல் செய்து அம்மனுவானது இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை அந்த இடைநிலை மனுக்கள் மீது இந்நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்க வில்லை.

4. மனுதாரர்கள் அவர்களுடைய O A no: 79/ 1972, O A no: 5/2007 மற்றும் திருத்தப்பட்ட O A no: 7 / 2024 ஆகியவற்றில் ஒப்புக்கொண்டுள்ள படி இத்திருக்கோயிலானது வெள்ளாளர், செட்டியார், கள்ளர் தொண்டைமான் பிரிவு, முதலியார் மற்றும் யாதவா சமூகத்தை சேர்ந்த நபர்களால் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும் கூறி இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 63(b) பிரிவின் கீழ் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இவ்வாறு தாவா கோயிலானது வெண்டாக்கோட்டை கிராமத்தை சேர்ந்த பல்வேறு சமூகத்தினரை இணைத்து இந்நீதிமன்றத்தில் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 63(b) பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல. அவ்வாறு மனுதாரர்கள் பரிகாரம் கோர இயலாது. மேலும் இந்த மனுதாரர்களுடைய முன்னோர்கள் O A no: 79 / 1972 மற்றும் O A no: 5 / 2007 –ல் தாக்கல் செய்த மனுக்களும் அதில் அளிக்கப்பட்ட மனுவிற்கும் சாட்சியத்திற்கும் தற்போது தாக்கல் செய்யப்பட்ட முரண்பாடுகள் உள்ளன. அவ்வாறு ஏற்பட்டுள்ள முரண்பாட்டிற்கு தற்போது நிலுவையில் உள்ள மனுவில் எந்த விதமான விளக்கமும் இந்நீதிமன்றத்திற்கு மனுதாரர்கள் அளிக்கவில்லை. 5 மற்றும் 6 எதிர் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரைகளையும் இந்த எழுத்து மூலமான வாதுரையின் ஒரு அங்கமாக கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தை பிரார்த்திக்கிறோம். O A no: 7 / 2024 என்ற கோப்பையிலேயே இல்லாத மனுவிற்கு எண் கொடுக்கப்பட்டு அதில் விசாரணையும் நடைபெற்றது.

No of word : 173
No of correction : Nil

125

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1 ரூபாய் १ रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re. COPY STAMP

5. மனுதாரர்கள் தங்கள் மனுவில் என்னென்ன காரணங்களினால் தங்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 63(b) பரிகாரம் கோருகிறோம் என்பதற்கு எந்த விதமான விளக்கத்தையும் தங்களது மனுவில் தெரிவிக்கவில்லை. மேலும் அவ்வாறு 63(b) பிரிவின் கீழ் பரிகாரம் கோருவதற்கு எவ்விதமான ஆவணங்களையும் தங்களது தரப்பில் தாக்கல் செய்யவில்லை இவ்வாறு மனுதாரர்கள் தரப்பை நிருபிப்பதற்கு அசல் மனுவில் எவ்வித கட்சியும் கூறாமலும் சாட்சியும் அளிக்காமலும் தங்கள் தரப்பை நிருபிக்க இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமலும் உள்ளதால் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் O A no: 79 / 1972 என்ற வழக்கும், O A no: 5 / 2007 என்ற வழக்கும் இந்நீதிமன்றத்தால் முழுமையாக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் இருதரப்பிலும் குறியீடு செய்யப்பட்டு முழுமையாக நடந்த விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்ட ஒரு வழக்காகும். அந்த உத்தரவின் மீது தரப்பினருக்கு அதிருப்தி இருந்தால் ஆணையர் அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். அவ்வாறு ஆணையர் அவர்கள், போடும் உத்தரவிலும் அதிருப்தி இருந்தால் பாதிக்கப்பட்ட தரப்பினர் சட்டப்பிரிவு 70ன் கீழ் உரிய நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யலாம். அவ்வாறு சட்டப்படி கூறப்பட்டுள்ள நடைமுறைகள் எதனையும் பின்பற்றாமல் வேண்டும் என்றே கெட்ட உள்நோக்கத்துடன் வெண்டாக்கோட்டை கிராமத்தில் இருதரப்பினர் இடையே கலகம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் கடந்த ஐம்பத்து மூன்று வருடங்களாக இந்த மனுதாரர்களும் அவர்களது முன்னோர்களும் சட்ட விரோதமாக தொடர்ந்து இந்த வழக்குகளை வேண்டும் என்றே நிலுவையில் வைத்து இருந்து கிராமத்தில் குழப்பத்தையும் கலவரத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர். கடந்த ஸர்வதாரி வருடம்

No of word : 168

No of correction : Nil

ONE RUPEE
1ரூபாய் १रुपया
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1 Re
COPY STAMP

வைகாசி மாதம் 3-ந் தேதி 16.05.2008 வெள்ளிக்கிழமை அன்று இத்திருக்கோயிலுக்கு புனராவர்தன நூதனாலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் இந்த எதிர் மனுதாரர்கள் அடங்கிய திருப்பணி குழுவினரால் நடத்த பெற்றது. அதன் பின்னர் 17 ஆண்டுகள் ஆகியும் இம்மனுதாரர்களின் சட்டவிரோத நடத்தையால் கும்பாபிஷேகம் நடத்த படாமல் உள்ளது.

6. எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த அசல் மனு எக்கோணத்தில் பார்த்தாலும் இந்த எதிர் மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று இந்த 5 மற்றும் 6 ஆம் எதிர்மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தை பிரார்த்திக்கின்றனர்

வெண்டாக்கோட்டை கிராமத்தில் 1. திருக்கோயில் குருக்கள். 2. மனுதாரர்கள், 3. எதிர்மனுதாரர்கள், 4. ஊர்முக்கியஸ்தர்கள் ஆகியோரை நேரில் சந்திந்து விசாரணை மேற்கொண்டு அவரிடமிருந்து பெற்ற வாக்குமூலங்கள் அடிப்படையில் கீழ்கண்டவாறு செயல் அலுவலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.குருக்கள் வை. வேதமணிசிவாச்சாரியர்

நான் கடந்த 50 வருடங்களாக மேற்கண்ட திருக்கோயிலில் பணிபுரிந்து ருகிறேன். எனது தகப்பனார் காலத்தில் கிராமத்தில் அனைவரும் சேர்ந்து ஒரு குழுவை தேர்ந்தெடுத்து அந்த குழு மூலமாக நிர்வாகம் செய்து வந்தனர். அதன் பிறகு இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்கு கீழ் 1974 ம் ஆண்டுக்கு பிறகு இத்திருக்கோயில் நிர்வாகம் இருந்து வந்தது. 1990 களுக்கு பிறகு நான்கு, ஐந்து முறை அரசாங்கத்தால் பரம்பரை முறை வழிசார அறங்காவலர் குழு ஏற்படுத்தப்பட்டு அவர்கள் மூலம் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. அதில் குறிப்பாக 1994 ம் ஆண்டு திரு. தர்மராஜ் வேளாளர் அவர்கள் அறங்காவலர் குழு தலைவராக இருந்த பொழுது நெல் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 4 கலம் சம்பளமாகவும் 1 கலம் படித்தரத்துக்கும் வழங்கப்பட்டது.

No of word : 171

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

எனக்கு தெரிந்த வகையில் இத்திருக்கோயில் கிராமத்தார்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் குழு மூலம் நிர்வாகம் நடத்தப்பட்டது. பிறகு இந்து சமய அறநிலையத்துறையின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

மேற்கண்ட இத்தகவலை தந்த குருக்கள் ர. வேதமணிசிவாசாரியார் இச்செய்திகள் அனைத்தையும் எழுத்துபூர்வமாக தர மறுத்துவிட்டார் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. மனுதாரர் திரு.ரா. நடனசபாபதி, த/பெ. ராஜப்பாவேளாளர்

நான் குடும்பத்தார் எனது மூலம் தெரிந்துகொண்ட வகையில் இத்திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு என்று 19.08.1911 ம் ஆண்டின் பட்டுக்கோட்டை சார்பதிவகத்தில் ஆவண எண்/5208 மூலம் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் பதியப்பட்டுள்ளது. அதன்படி அதே ஊரைசேர்ந்த 1. கோவிந்தசாமி வேளாளர், 2. எனது தந்தை ராஜப்பாவேளாளர், 3. சொக்கலிக்கம் செட்டியார். 4. கோவிந்தன் நாயக்கர். ரெங்கசாமி முதலியார் ஆகிய 5 நபர்கள் தலைமையில் மேற்கண்ட திருக்கோயில் நிர்வாகம் நடத்தப்படவேண்டும் என்றும், இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்பிறகு மேற்கண்ட 5 நபர்களோ அல்லது அவர்களுடைய வாரிசுதாரர்களோ அவர்கள் பிரியப்படி திருக்கோயில் நிர்வாகத்தை நடத்திக்கொள்ளலாம் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 5 நபர்களை தொடர்ந்து அவர்களின் வாரிசுகளான நான் உட்பட இன்னும்பிற 4 நபர்களும் பரம்பரைமுறை அறங்காவலர்களாக நியமிக்கப்படவேண்டும்.

மேற்கண்ட இத்தகவலை தந்த திரு.ரா. நடனசபாபதி . த/பெ. ராஜப்பாவேளாளர் இச்செய்திகள் அனைத்தையும் எழுத்துபூர்வமாக தர மறுத்துவிட்டார் எனற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

No of word : 144
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய் १ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

3. எதிர் மனுதாரர் திரு.புருஷோத்தமன், த/பெ.கோவிந்தவேளாளர்.

இத்திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு என்று 19.08.1911 ம் ஆண்டின் பட்டுக்கோட்டை சார்பதிவகத்தில் ஆவண எண்/5208 மூலம் ஒரு செட்டில்மெண்ட் திரம் பதியப்பட்டுள்ளது. அதன்படி அதே ஊரைசேர்ந்த 1. கோவிந்தசாமி வேளாளர். 2. ராஜப்பாவேளாளர்.3. சொக்கலிக்கம் செட்டியார். 4. கோவிந்தன் நாயக்கர், 5.ரெங்கசாமி முதலியார் ஆகிய 5 நபர்கள் தலைமையில் மேற்கண்ட திருக்கோயில் நிர்வாகம் நடத்தப்படவேண்டும் என்றும், இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது வெறும் தற்காலிக ஏற்பாடேயாகும். அதன்பிறகு திருக்கோயிலை நிர்வகிக்க அந்த ஒப்பந்தத்தின்படி யாருக்கும் தெளிவான உரிமம் கொடுக்கப்படவில்லை. இந்த ஒப்பந்த்தின் அடிப்படையில் இத்திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு 5 நபர்களுக்கோ மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கோ எவ்வித பரம்பரை உரிமையும் வழங்கப்படவில்லை.மேலும் இது இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 1959க்கு முன்னரே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகையால் இது இத்துறையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. எனவே இத்திருக்கோயிலை நிர்வகிக்க பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களே நியமிக்கப்படவேண்டும்.

மேற்கண்ட இத்தகவலை தந்த திருபுருஷோத்தமன், த/பெ.கோவிந்தவேளாளர் இச்செய்திகள் அனைத்தையும் எழுத்துபூர்வமாக தர மறுத்துவிட்டார் எனற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4.ஊர் முக்கியஸ்தர் திரு.வக்கீல் ராமசாமி. த/பெ.ரெங்கசாமி வேளாளர்.

இத்திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு என்று 19.08.1911 ஆண்டின் பட்டுக்கோட்டை சார்பதிவகத்தில் ஆவண எண்/5208 மூலம் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் பதியப்பட்டுள்ளது. 5 நபர்கள் தலைமையில் மேற்கண்ட திருக்கோயில் நிர்வாகம் நடத்தப்படவேண்டும் என்றும், இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையில்

No of word : 148
No of correction : Nil

ONE RUPEE

1ரூபாய் १रुपया

GOVERNMENT OF TAMIL NADU

TRUTH ALONE TRIUMPHS

COPY STAMP

இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. பிறகு இந்து சமய அறநிலையத்துறையால் பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர் குழு ஏற்படுத்தப்பட்டது. இத்திருக்கோயிலை பரம்பரை அறங்காவலர்கள் மூலமாக நிர்வகிப்பதற்கு எவ்வித உரிமையும் மற்றும் எந்த ஒரு முகாந்திரமும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

1. இத்திருகோயிலுக்கு எந்த ஒரு தனிநபரோ. குடும்பமோ சொத்துகளை எழுதிவைத்ததற்கான எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

2. இத்திருக்கோயிலின் நிர்வாகம் ஆனது எந்த ஒரு தனிநபராலோ. அல்லது எந்தவொரு குடும்பமோ தனிப்பட்ட முறையில் நிர்வாகம் செய்ததற்கான போதிய ஆதாரம் இல்லை.

3. நமது துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதற்கு முன் இத்திருக்கோயிலின் அன்றாட பூஜைகள், திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் கிராமத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தி வந்ததாகவே தெரியவருகிறது.

4. இத்திருக்கோயிலின் இன்று நடக்கும் பிரச்சனைகளுக்கு காரணம் அவ்வூரை சேர்ந்த ஒரே சமூகத்தினர் இரண்டு தரப்பினராக பிரிந்து நின்று தனிப்பட்ட காரணங்களுக்காக தங்களுக்குள் சண்டையிட்டுகொள்வதே ஆகும்.

5. இத்திருக்கோயில் அமைந்திருக்கும் வெண்டாக்கோட்டை கிராமத்தில் பல்வேறு சமூகத்தை சேர்ந்த மக்கள் வசிப்பதால் இத்திருக்கோயில் நிர்வாகம் ஆனது நிர்வாகத்திட்டத்தாலோ அல்லது பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர் குழு மூலமாகவோ நிர்வகிக்கப்பட்டால் பிரச்சனைகள் தீர்ந்து ஒரு சமூகநிலையை எட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று அவ்வூர் மக்கள் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அசல் மனு தொடர்பாக பட்டுக்கோட்டை சரக ஆய்வாளரால் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களிடம் வாக்குமூலங்கள் பெற்றும், விசாரணை செய்தும் ஓ.மு.எண்.131/2025/நாள்.08.05.2025. மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேற்படி மனுதாரர்களின் மூதாதையர்கள் நான்கு கரைகளாக செயல்பட்டு

No of word : 157
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMIL NADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

திருக்கோயில் கட்டியதுடன், திருக்கோயிலுக்கு சொத்துக்கள் எழுதி வைத்து, அன்று முதல் பராமரித்து வந்துள்ளார்கள் என்றும், மேற்படி திருக்கோயில் சொத்துக்கள் 1911–ல் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் மனுதாரர்களாகிய தங்களின் மூதாதையர்கள் நம்பகர்கள் என்று பதிவாகி உள்ளதாகவும், மேலும் மனுதாரர்களின் மூதாதையர் 1) தர்மராஜ் வேளாளர் மகன் கோவிந்தசாமி வேளாளர் 2. தம்பிராயர் வேளாளர் மகன் ராஜப்பா வேளாளர் 3.ராமசாமி செட்டியார் மகன் சொக்கலிங்கம் செட்டியார் 4. வடமலை நாயக்கர் மகன் கோவிந்தசாமி நாயக்கர் 5. ராமசாமி முதலியார் மகன் ரெங்கசாமி முதலியார் என்பவர்கள் மேற்படி திருக்கோயிலின் சொத்துக்களை பராமரித்து வரவும், திருக்கோயிலை பராமரிக்கவும் இருபத்தி மூன்று நபர்கள் சேர்ந்து செய்து கொண்ட ஒப்பந்தம் பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பதாகவும், தங்கள் மூதாதையர்களால் நிர்வகிக்கப்பட்ட திருக்கோயிலை முன்னேற்றம் அடைய செய்வதற்காகவும், தற்போதுள்ள இவர்களுடைய வாரிசுகள் என்ற முறையில் நிர்வாகம் பார்த்து வர ஏதுவாக இலாக்கா சட்டப்பிரிவு 63(b)ன் கீழ் பரம்பரை அறங்காவலர்களாக நியமனம் செய்ய வழக்கு தொடரப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பின்வருமாறு மனுதாரர்களின் வம்சாவழிப் பட்டியலாக ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

No of word : 112
No of correction : Nil

137 -

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re. COPY STAMP ایک روپیہ

<u>வம்சாவழி பட்டியல்</u>

| |
|---|
| 1 வது நபர் |
| மனைவி திருமதி வீரசுந்தரி |
| (நான்கு பெண் வாரிசுகள் உள்ளது ஆண்வாரிசு இல்லை) |
| ↓ |
| கோவிந்தசாமி வேளாளர் (மனுதாரரின் கணவர்) (வெளியூரில் வசிக்கின்றார் |
| ↓ |
| (லேட்) தர்மராஜ் வேளாளர் ( மாமனார்) |
| ↓ |
| (லேட்) பெருமாள் வேளாளர்<br>(மனுதாரரின் கணவருக்கு தாத்தா) |
| ↓ |
| 2.வது நபர்<br>நடனசபாபதி |
| ↓ |
| (லேட்) ராஜப்பா வேளாளர் (தகப்பனார் |
| ↓ |
| (லேட்) தர்மராஜ் வேளாளர்( தாத்தா) |
| ↓ |

No of word : 42

No of correction : Nil

-139-

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1ரூபாய்

१रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

(லேட்) ராஜப்பா வேளாளர் ( தர்மராஜ் என்பவருக்கு மகன்)

↓

3வது நபர்
சிவகுரு

↓

(லேட்) இளங்கோவன் செட்டியார் (அப்பா)

↓

(லேட்) ராமசாமி செட்டியார் (தாத்தா)

↓

சொக்கலிங்கம் செட்டியார் ( சிவகுருவிற்கு அப்பா வழி தாத்தா
4 வது நபர்)

↓

ராஜேந்திர தொண்டமான்

↓

(லேட்) ராமலிங்க தொண்டமான் (மனுதாரருக்கு அப்பா)

↓

(லேட்) அருணாச்சல தொண்டமான் (ராஜேந்திரதொண்டமானின் தாத்தா)

↓

No of word : 40
No of correction : Nil

ONE RUPEE

GOVERNMENT OF TAMILNADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re. COPY STAMP

| |
|---|
| (லேட்) பொதியப்ப தொண்டமான் (ராஜேந்திர தொண்டமானின் அப்பாவுக்கு தாத்தா |
| ↓ |
| (லேட்) கோவிந்த நாயக்கர் (வகையறா) கொள்ளுதாத்தா |
| 6–வது நபர் திருத்தணி வேல் |
| ↓ |
| (லேட்) ரெங்கசாமி முதலியார் (அப்பா) |
| ↓ |
| (லேட்) சிதம்பரம் முதலியார் (தாத்தா) |
| ↓ |
| (லேட்) ரெங்கசாமி முதலியார் (அப்பா வழி தாத்தா) |

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள 5 நபர்கள் ஒன்றாக இணைந்து வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தங்களை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்ய வேண்டும் என கோரி இந்த அசல் மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த அசல் மனுவை பொறுத்தவரையில் மனுதாரர்கள் அனைவரும் தங்களை நேரடியாக பரம்பரை அறங்காவலராக நியமிக்க மனு தாக்கல் செய்யமுடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் இந்து சமய அறநிலையத்துறை கொடைகள் சட்டம் பிரிவு 63(b)–ன் கீழ் ஏற்கனவே ஒரு திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் என்ற முறையில் திருக்கோயில் நிர்வாகம் செய்து அதன் அடிப்படையில் வாரிசு முறைமையாக

No of word : 100

No of correction : Nil

- 142 -

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1 ரூபாய்

१ रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

நிர்வாகம் செய்யப்பட்டு வந்ததை மனுதாரர்கள் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்க வேண்டும். ஏற்கனவே இதே போன்று பரிகாரம் கோரி அசல் மனு O.A.05/2007 தாக்கல் செய்யப்பட்டு அதில் 08.02.2011 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் பிறகு ஆணையர் முன்பாக A.P.14/2012 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அதில், மீண்டும் இணை ஆணையருக்கே மீட்டனுப்புகை செய்து, ஆணையர் அவர்களால் உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி இந்த மனு மீண்டும் கோப்பில் எடுக்கப்பட்டு வழக்கினை மேல் நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு இந்த அசல் மனு 07/2024 புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவிலும் ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள அதே பரிகாரங்களுக்காக மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அசல் மனுவை பொறுத்தவரையில் ஏற்கனவே மனு தாக்கல் செய்த நபர்களில் சிலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களுக்கு பதிலாக அவர்களுடைய வாரிசுகள் இந்த மனுவில் மனுதாரர்களாக உள்ளனர். 19.08.1911–ல் பதிவு செய்யப்பட்ட ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் திருக்கோயிலை நிர்வகிக்க நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அந்த நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு பூஜைகள் நடத்தப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.. வருவாய் துறை ஆவணத்தில் புல எண்.111 திருக்கோயில் பெயரில் உள்ளது. அதன் நம்பரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளதை 5 நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனு திருக்கோயில் மனுதாரர்களின் மூதாதையர்களான நான்கு கரைதாரர்களால் நிர்வகிக்கப்பட்டு அவர்களுக்குள் கருத்து ஒற்றுமையாக ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் படி இம்மனுவின் மனுதாரர்களின் தந்தை மற்றும் பாட்டனார்களால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது என்பது மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் அறியமுடிகிறது.

No of word : 165

No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
1ரூபாய் १रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP

இந்த மனுவின் 2–ஆம் எதிர் மனுதாரர் இந்த நீதிமன்றம் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவில்லை என்றும் ஆவணங்கள் குறியீடு செய்ய அனுமதி அளிக்கவில்லை என்றும் இதனால் இந்த வழக்கினை மறுதிறப்பு செய்ய வேண்டுமென கோரி ஒரு memo 25.04.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர் மனுதாரர்கள் 2 முதல் 4 வரை உள்ளவருடன் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்ற அடிப்படையில் தோன்றா தரப்பினர்களாக கருதப்படுகிறார்கள். மேலும் எதிர் மனுதாரர்கள் 5 மற்றும் 6 ம் நபர்கள் வழக்கிற்கு தொடர்பு இல்லாமல் கோரிக்கை மனு பரிசீலிக்க இயலாது.

புலஎண்.111–ல் கண்ட சாகுபடி நிலங்களின் மேல்வார உரிமையை மட்டும் மனுக் கோவிலுக்கு தானமளித்து அதனை குத்தகைக்கு விட்டு அதன் வருமானங்கள் முழுவதையும் மனு கோவிலுக்கு அளித்து வருகின்றனர். அதனால் தான் புலஎண்.111–ல் கண்ட நிலங்களின் வருவாய் கணக்குகள் மனுக் கோவில் மற்றும் மனுதாரர்களின் மூதாதையர்கள் பெயரில் கூட்டாக பல தலைமுறைகளாக காணப்படுகிறது.

O.A.79/72–ல் முதல் மனுதாரரின் மூதாதையர் தர்மராஜ் என்பவரால் தனிப்பட்ட முறையில் தான் குடும்பத்திற்கு மட்டுமே சொந்தமான கோவில் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். O.A.79/72 & O.A.5/07 வழக்குகள் செட்டில்மெண்ட்டின்படி ஏற்படுத்தப்பட்ட ஐந்து தலைமைக்காரர்களின் நிர்வாக கட்டமைப்பை சேர்ந்த தற்போதைய வாரிசுகளான மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. இதனையே "O.A.79/72 வழக்கின் தீர்ப்பில் Ex.B.1 (RSR) & Ex.B.2 (செட்டில்மெண்ட்) ஆகியவை முக்கிய (Vital Documents) ஆவணங்கள் என்றும்; அவைகள் எந்த காலத்திலும் (மனுதாரர் சொல்வது போல) தனி ஒரு நபர் அறங்காவலர் நிர்வாகத்தில் இருந்ததில்லை என்றும்; எப்போதுமே கிராமத்தில் கண்ட அனைத்து வகுப்பினராலும் அதாவது Ex.B.2–ல் கண்ட 4கரைதாரர்களிடமிருந்து தேர்தெடுக்கப்பட்ட ஐந்து தலைமைக்காரர்களாலும்

No of word : 170
No of correction : Nil

-147-

ONE RUPEE

GOVERNMENT OF TAMIL NADU

1ரூபாய் १रुपया

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

அவர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர் அறங்காவர்கள் குழுவால் தான் மனு கோவில் நிர்வாகம் பார்த்து வரப்பட்டுள்ளது என்று இணை ஆணையர் O.A.79/72-ல் கூறியுள்ளார். எனவே O.A.79/72 & O.A.5/07 இரு வழக்குகளுமே மனுக் கோவில் நிர்வாகம் செட்டில்மெண்ட்படி ஏற்படுத்தப்பட்ட பரம்பரைவழி சார்ந்த ஐந்து தலைமைக்காரர்களிடமும் அவர்களுக்கு பிறகு அவர்களது வாரிசுகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடம் உள்ளது என்று தெளிவாக. O.A.79/72 & O.A.5/07 இரு வழக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே, அளித்த முடிவின் அடிப்படையில் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் நிர்வாகம் பரம்பரையாக நிர்வகித்து வந்ததை நிரூபித்த சூழலில் மறுதிறப்பு செய்வதால் மட்டும் இந்த வழக்கின் போக்கு மாறுவதற்கு எந்த சாத்தியமும் இல்லை. ஆகவே, தாக்கல் செய்யப்பட்ட அனைத்து இடைநிலை மனுக்களும் நிராகரிக்கப்படுகிறது.

இம்மனுவின் விவரங்கள் மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள், மனுதாரர்கள் எழுத்துப்பூர்வமான வாதுரை, எதிர்மனுதாரர்கள் எழுத்துப்பூர்வமான வாதுரை, எதிர் மனுதாரர் ஆவணங்கள், செயல் அலுவலர் அறிக்கை, பட்டுக்கோட்டை, இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் அறிக்கை, இதர தொடர்புடைய ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள், அவர்களது முன்னோர்கள் ஆகியோர்கள் மட்டுமே இத்துறை ஆளுகை கீழ் கொண்டு வரும் வரையில் இத்திருக்கோயிலினை நிர்வாகம் செய்து வந்துள்ளனர் என்பது இதன் மூலம் நன்கு உறுதியாகிறது. ஆகவே, மனுதாரர்களே வழக்கிடைத் திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர்கள் என தீர்மானிப்பதில் தவறில்லை. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிர்வாகம் பரம்பரை தன்மையுடையது எனவும்

No of word : 155

No of correction : Nil

ONE RUPEE

1 ரூபாய்

१ रुपया

GOVERNMENT OF TAMIL NADU

TRUTH ALONE TRIUMPHS

1 Re.

COPY STAMP

ایک روپیہ

இத்திருக்கோயிலுக்கு மனுதாரர்கள் கோ. வீரசுந்தரி, ரா. நடன சபாபதி, இ. சிவகுரு செட்டியார், ரா. ராஜேந்திரன், மற்றும் அ. திருத்தணிவேல் என்பவர்களை பரம்பரை அறங்காவலர்களாக விளம்புகை செய்தும் மனுவினை ஏற்றும் (Allowed) உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது

ஒம்./ மு. ஜோதிலட்சுமி,
இணை ஆணையர்

/ உத்திரவின்படி /

மேலாளர்
03/04/25

மனுதாரர் தரப்பு சாட்சி:

ம.சா.1 (P.W1) : திருமதி.கோ.வீரசுந்தரி
ம.சா.2 (P.W2) :திரு.ரா. அசோக்குமார்

No of word : 45
No of correction : Nil

ONE RUPEE
1 ரூபாய் १ रुपया
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS
1 Re COPY STAMP

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| 1 | ம.த.சா.1 | 19.12.1911–ம் ஆண்டு செட்டில் மெண்ட் ஆவணம் நகல் (ஆட்சபேணையுடன்) |
| 2 | ம.த.சா.2 | தர்மராஜ் வேளாளர் இறப்பு மற்றும் வாரிசு சான்று நகல் (ஆட்சபேணையுடன்) |
| 3 | ம.த.சா.3 | ஒ.ஏ.05/2007 ன் வழக்கு தீர்ப்பின் அசல் |
| 4 | ம.த.சா.4 | கோவில் நிலத்தின் வருவாய் ஆவணங்கள் அசல் (ஆட்சபேணையுடன்) |
| 5 | ம.த.சா.5 | முதல் மனுதாரருக்கு வி.ஏ.ஓ வழங்கிய சான்று அசல் |
| 6 | ம.த.சா.6 | பரம்பரை வழி சாரா அறங்காவலர் நியமன RTI தகவல் அசல் |
| 7 | ம.த.சா.7 | புதிய தேர் கட்டுமான வரவு செலவு கணக்குகள் அசல் |

No of word : 64
No of correction : Nil

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
1 ரூபாய்
१ रुपया
TRUTH ALONE TRIUMPHS
1 Re.
COPY STAMP
ایک روپیہ

| | |
|---|---|
| 8 | எழுத்துமூல வாதுரை |
| 9 | எழுத்துமூல வாதுரை (Neat Copy), 19.08.1911 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் (Script Copy) |
| 10 | செட்டில்மெண்ட் பத்திரம் தெளிவான தட்டச்சு நகல் |
| 11 | மனு கோவில் நில உரிமை விபரம் ஆன்லைன் நகல் |
| 12 | மனு கோவில் நிலத்திற்கு பொண்ணாவராயன் கோட்டை கி.நி.அ. சான்று |
| 13 | மனு கோவில் நிலத்திற்கு பொண்ணாவராயன் கோட்டை கி.நி.அ. 1432பசலி அடங்கல் சான்று |
| 14 | O.A. 79/1972 |
| 15 | ஆட்சேபனைதாரர்கள் எதிருரை (R.V.சிதம்பர வேளாளர் & பலர்) |
| 16 | பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை & வாக்குமூலங்கள் |
| 17 | O.A. 79/1972-ல் கண்ட உத்தரவு |
| 18 | O.A. 5/2007 மனு, பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை & வாக்குமூலங்கள் |
| 19 | மனுதாரர் தரப்பு எழுத்துமூல வாதுரை (ராமசாமி வேளாளர் & பலர்) |
| 20 | இரா.சிவக்குமார் வேளாளர் RTI மனுவின் பேரிலான பெற்ற தகவல்கள் |
| 21 | O.A. 5/2007-ல் கண்ட உத்தரவு |
| 22 | A.P.14-2012 D2-ல் கண்ட உத்தரவு |

ஒம்./ மு. ஜோதிலட்சுமி,
இணை ஆணையர்

/ உத்திரவின்படி /

கண்காணிப்பாளர்.
03/06/25

| | |
|---|---|
| No of Words | 114 |
| No.Of Correction | Nil |
| No.of.Total words | 12,444 |
| No.Of.Total Correction | Nil |
| Typed by | Vandarkuzhali.T |
| Read by | Indhukavi.V |
| Compared by | Jothikani.K |

154

OFFICE OF THE JOINT COMMISSIONER,
HINDU RELIGIOUS & CHARITABLE ENDOWMENTS
DEPARTMENT, THANJAVUR.

| | | |
|---|---|---|
| Application Made on | : | 03-06-2025 |
| Copy Stamps Called on | : | 03-06-2025 |
| Copy Stamps Produced on | : | 03-06-2025 |
| Copy Ready on | : | 03-06-2025 |
| Copy Furnished on | : | 30-06-2025 |

Manager